விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 07 சனிக்கிழமை (24.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

## தமிழ் மக்கள் ஒன்றுபட்டாலே இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற முடியும்

### முன்னணியும் எம்முடன் இணைவார்கள் விக்னேஸ்வரன் நம்பிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்காலத்தில் எம்முடன் வந்து இணைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் ▶23

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள்

### ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் ▶23

## இராணுவ புலனாய்வு அதிகாரி கைது

(கொழும்பு)

2008ஆம் ஆண்டில் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட வழக்கில் இராணுவ புலனாய்வு அதிகாரி பணியாளர் சார்ஜென்ட் சாமிதா சுமித் குமாரா கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் தப்புலா டி லிவேரா அளித்த அறிவுறுத்தல்களின்படி இந்த கைது இடம் பெற்றுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்கள ஒருங்கிணைப்பு செயலாளர் ▶23

### பெண்ணின் சங்கிலி அறுத்த இருவர்

## வீதி விபத்தில் சிக்கி வசமாக மாட்டிக் கொண்டனர்

### சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-தனங்கிளப்பு வீதிப் பகுதியில் தனியாகப் பயணித்த பெண் ணின் சங்கிலியை அறுத்த இரு இளைஞர்கள் விபத்தில் சிக்கி வசமாக மாட்டியுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

சாவகச்சேரி நகரில் இருந்து தனங்கிளப்பு வீதி ஊடாக பயணித்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை ▶23

### -காணாமல் ஆக்கப்பட்டவர்களின்-

## அலுவலக அதிகாரிகள் நேற்று மண்டைதீவுக்கு விஜயம்

(மண்டைதீவு)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலக அதிகாரிகள் நேற்று மண்டை ▶23

### காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான

## பிராந்திய அலுவலகம் யாழில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பிராந்திய அலுவலகம் யாழில் ▶23

### தொல்பொருள், வனஜீவராசிகள் திணைக்களத்தால்

# தமிழ் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர்

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

**(கொழும்பு)**

**தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தால் தமிழ் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எடுத்துரைத்துள்ளது.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று மாலை இடம் பெற்ற சந்திப்பின்போதே குறித்த விடயம் எடுத்துரைக்கப்பட்டதாக தமிழரசு கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதனுடன் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் பௌத்த தேரர்களால் கன்னியா, நீராவியடி உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்துமீறல்கள் தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இல்லாமை காரணமாக இந்த ▶23

### அமைதியைப் பேண

## முப்படையினருக்கு அதிகாரம் - ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் பொது அமைதியைப் பேணி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முப்படையினருக்கு அதிகாரமளிக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி மைத்திரி ▶23

### கடற் பிரதேசங்களில்

## காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடற் பிரதேசங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் ▶23

## ஆரம்பமாகியது எழுக தமிழ் பிரசாரம்



(யாழ்ப்பாணம்)

எழுக தமிழ் நிகழ்வுக்கு மக்களை அணிதிரட்டுவதற்கான பிரசாரம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் ஆலய முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. ▶23

## பிக்குகளால் தமிழர்களுக்கு மட்டுமல்ல எனக்கும் பெரிய தலையிடிதான்

### கூட்டமைப்பிடம் மனந்திறந்த ஜனாதிபதி

(கொழும்பு)

பௌத்த பிக்குகளால் தமிழர்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் பெரிய தலையிடியாகத்தான் இருக்கிறது என கூட்டமைப்பினரிடம் மனந்திறந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ▶23

## தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத்திட்டமே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகும்

### தன்னைச் சந்தித்த திஸ்ஸ விதாரணவிடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண நேற்றைய தினம் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச் சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து இனப் ▶23

# சர்வதேசத்தையும் ஐ.நாவையும் ஏமாற்றவே யாழில் காணாமல் போனோர் அலுவலகம்

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்


(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளையும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவையும் ஏமாற்றும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளதாகவும், இது ஒரு கண்துடைப்பு என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறக்க எடுக்கும் முயற்சி அப்பட்டமான ஒரு நாடகம்.

ஓ.எம்.பி அலுவலகத்தால் இதுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை. தற்போது யாழ்ப்பாணத்தில் அதன் அலுவலகத்தை திறக்க எடுக்கும் முயற்சி வெறும் கண்துடைப்பு.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்ற போது தெளிவான எந்த இலக்குகளோ, கால அட்டவணையோ இல்லை. இந்த அலுவலகத்துக்கு முறையிடப்படாத ஏராளமான காணாமல்போன சம்பவங்கள் இருப்பதாகவும், ஆனால், அவை தொடர்பில் இந்த



அலுவலகம் கரிசனை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

வெறுமனே கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் அல்லாமல், எத்தனை பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவதற்கான உண்மையான தரவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

அதேபோல காணாமல் போன உறவினர்கள் தொடர்பில் முறைப்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர்ந்து வாழும் மக்களுடன் தொடர்பு கொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

எனவே, சர்வதேச நாடுகளையும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவையும் ஏமாற்றும் வகையில் இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளதாகவும், மொத்தத்தில் இது ஒரு கண்துடைப்பு. ஆகவே, அரசாங்கம் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

### நிச்சயம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்

# நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் ராஜாவாக்குவேன் ; சஜித் பிரேமதாச



(கொழும்பு)

யாரும் சந்தேகம் கொள்ள வேண்டாம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன். மாளிகையில் வாழ்வதற்கல்ல, நாட்டிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ராஜாவாக்குவதற்காகவே ஜனாதிபதியாகுவதாக தெரிவித்துள்ளார் ஐ.தே.கவின் பிரதி தலைவர் சஜித் பிரேமதாச.

எனது தந்தை போல் பொது மக்களுடன் கைகோர்த்து எனது மரணத்தை தழுவவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பிரமாண்ட மக்கள் பேரணியில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எவரும் எவ்வகையிலும் சந்தேகம் கொள்ள வேண்டாம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச களமிறங்குவது உறுதியென கூறுகிறேன்.

நாட்டை முன்னேற்றும், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்யும் தலைவர் ஒருவரையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அன்பான மக்களே, எமது நாட்டுக்கு அந்த தலைமைத்துவத்தை நான் பெற்றுக் கொடுப்பேன் என்பதை இவ்வேளையில் கூறுகிறேன். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டமொன்றை, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் திட்டமொன்றை, நாட்டை ஒன்றுபடுத்தும் திட்டமொன்றை முன்வைக்கவே நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் நவம்பர் மாதம் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவோம். ஸ்ரீலங்கன் பெஸ்ற் என்ற திட்டத்தை முன்னெடுப்போம் என்பதை கூறுகின்றேன்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படுத்தும் இந்த மாற்றத்தின் நோக்கம், மக்கள் கழுத்தேறி சென்று மாளிகைகளில், சொகுசு வாழ்க்கை வாழ்வதல்ல. உங்களிற்கு சஜித் பிரேமதாச ஒரு வாக்களிக்கிறார். உங்களிற்கு சஜித் பிரேமதாசவை மாளிகையில் காண முடியாது.

எனினும், இந்த நாட்டிலுள்ள 42.000 சிறிய கிராமங்களில் என்னை உங்களால் காண முடியும். 14,000 கிராமசேவகர் பிரிவுகளிலும் என்னை கண்டுகொள்ள முடியும்.

இந்த நாட்டிலுள்ள 61 இலட்சம் குடும்பங்களையும், 220 இலட்சம் மக்களையும் அரசர்களாக்கும் யுகத்திற்கு நான் கொண்டு செல்வேன் என்றார். (ம)


3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வசந்தராசா தனுஷா

பிறப்பு : 24.10.1983 இறப்பு : 26.08.2016



எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஒளிர்ந்தவளே!
உன் நினைவால் என்றும் நாம்
வெதும்பி அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்

நீர் அணைந்து மூன்று ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
உன் ஒளி முகத்தை முன்நிறுத்தி
என்றும் உன் நினைவுடனே
வாழுகின்றோம்

நினைவில் எம்முடனும்
நிஜத்தில்
இறைவனிடமும் கலந்திட்ட
உன் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

கணவர் - வசந்தராசா
மகன் - அஸ்வின்


### இனங்களுக்கிடையே நம்பிக்கை முறிந்தால்

# நாட்டை முன்னோக்கிச் செல்ல முடியாது - மகிந்த



(கொழும்பு)

இனங்களுக்கு இடையில் நம்பிக்கை முறிந்தால் நாடு என்ற ரீதியில் முன்னோக்கி செல்ல முடியாது என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கைக்கான ஐக்கிய நாடுகளின் ஒருங்கிணைப்பாளர் அகமட் ஷாஹீத் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் அவரை சந்தித்த போது எதிர்க்கட்சி தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கைக்கான ஐக்கிய நாடுகளின் ஒருங்கிணைப்பாளர், இலங்கையில் மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் சிறந்த நல்லிணக்கம் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

# வடமராட்சி கிழக்கில் நீருக்கடியில் மறைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் கடற்படையினரும், பயங்கரவாத தடுப்பு பிரிவினரும் இணைந்து நடத்திய நடவடிக்கையில் நீருக்கடியில் மறைத்து வைக்கப்பட்ட பெருந்தொகை வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.

வடமராட்சிகிழக்கு ஆழியவளை கடற்பகுதியில், சந்தேகத்திற்கிடமான இந்த பொதி மீட்கப்பட்டது. வடக்கு கடற்படை கட்டளை மற்றும் கொழும்பு பயங்கரவாத புலனாய்வு பிரிவு இணைந்து மேற்கொண்ட இந்த நடவடிக்கையில், நீருக்கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 15 கிலோகிராம் எடையுள்ள இந்த சந்தேகத்திற்கிடமான பொதியை கண்டுபிடித்தனர். பின்னர் அந்த பொதி மேலதிக விசாரணைக்காக கொழும்பு பயங்கரவாத புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக பரிசோதனையில் அது சி 4 வெடி மருந்து என தெரியவந்தது. (ம)

# திறப்பு விழா அழைப்பிதழ்

தென்மராட்சி மண்ணில் புதியதோர் உதயம்

# "நட்சத்திர மஹால்"

திருமண மண்டபம்(A-9 வீதி, கொடிகாமம்)



25.08.2019
காலை 9.30 மணி
ஞாயிற்றுக்கிழமை

இராமாவில் கந்தசாமி ஆலயத்திற்கும் கோயிலாமனை சந்திக்கும் இடையில் கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து A-9 வீதியில் சாவகச்சேரி நோக்கி 500 m தூரத்தில்.

- திருமண விழாக்கள்
- பிறந்த நாள் விழாக்கள்
- உணவுப் பரிமாற்றச் சேவைகள்
- 1000 இற்கு மேற்பட்ட இருக்கை வசதிகள்
- பூப்புனித நீராட்டு விழாக்கள்
- அலுவலக கலந்துரையாடல்கள்
- பொது நிகழ்வுகள்
- மண்டபத்தின் பின்புறத்தில் அதிகூடிய வாகனத்தரிப்பிட வசதி உண்டு
- A/C வசதியுடன், வெளிப்புற படப்பிடிப்பிற்கு ஏற்ற பூங்கா அமைப்பு, சைவ/அசைவ உணவுகள் தனித்தனி
- பாத்திரங்களில் பரிமாறப்படும்.

தினமும் சேவையில் (முன்புறமாக)

## Nadsathira Restaurant

- சைவ / அசைவ உணவுகள்
- பழ இரசங்கள்

- விஷேட மதிய போசனத்தில் கலந்து சிறப்பித்துக் கொள்ளவும்
- விஷேட நிகழ்ச்சியாக சித்தார்த் குழுவினரின் "நாதஸ்வர சோலோ நிகழ்ச்சி" இடம்பெறும்

அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் படி அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு - 076 016 9596,
077 404 6540, 077 778 0730

திரு.பரமானந்தம்-லதாதேவி குடும்பத்தினர்.
(முன்னாள் ஆசிரியர், சாவகச்சேரி.இ.கல்லூரி)
இத்தியடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

# ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்டில் 67 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து



ஹெட்டிங்லே டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து 67 ரன்னில் சுருண்டு படுமோசமான நிலையை சந்தித்துள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட் ஹெட்டிங்லேயில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் முதல் நாளில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 179 ரன்கள் சேர்த்து ஆல்அவுட் ஆனது. ஜாப்ரா ஆர்சர் 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். அவுஸ்திரேலிய அணி சார்பில் டேவிட் வார்னர், மார்னஸ் லாபஸ்சாக்னே அரைசதம் அடித்தனர்.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சை தொடங்கியது. அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஹசில்வுட், பேட் கம்மின்ஸ், ஜேம்ஸ் பேட்டின்சன் ஆகியோரின் நேர்த்தியான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் இங் கிலாந்து அணி தடுமாறியது.


தொடக்க வீரர்களாக ஜோ பேர்ன்ஸ் (9), ஜேசன் ராய் (9) சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த ஜோ ரூட் ஹசில்வுட் பந்தில் டக்அவுட் ஆனார். அதன்பின் இங்கிலாந்தின் விக்கெட்டுக்கள் சீட்டுக்கட்டுபோல் சரிய ஆரம்பித்தது. மதிய உணவு இடைவேளை வரை இங்கிலாந்து 6 விக்கெட் இழப்பிற்கு 54 ரன்கள் எடுத்திருந்தது.

**பேட் கம்மின்ஸ்**

மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும் 3.4 ஓவர்களே மட்டுமே தாக்குப்பிடித்து 13 ரன்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 67 ரன்னில் சுருண்டது இங்கிலாந்து. அவுஸ்திரேலிய அணி சார்பில் ஹசில்வுட் ஐந்து விக்கெட்டும், பேட் கம்மின்ஸ் 3 விக்கெட்டும், பேட்டின்சன் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 112 ரன்கள் முன்னிலை பெற்ற நிலையில் 2-வது இன்னிங்சில் பேட்டிங் செய்து வருகிறது.

# உலக சம்பியன்ஷிப் பட்மின்ரனில் அரையிறுதிக்கு முன்னேறினார் சிந்து



உலக சம்பியன்ஷிப் பேட்மிண்டனில் அரையிறுதிக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்தார் பிவி சிந்து.

உலகக்கிண்ண சம்பியன்ஷிப் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. ஒரு காலிறுதியில் இந்தியாவின் பிவி சிந்து சீன தைபேயின் தாய் ஜு யிங்-கை எதிர் கொண்டார்.

முதல் செட் பிவி சிந்துவுக்கு சிறப்பாக அமையவில்லை. யிங் 21-12 என எளிதாக கைப்பற்றினார். ஆனால் 2-வது செட்டில் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். யிங்கும் பதிலடி கொடுக்க, ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது.

இறுதியில் பிவி சிந்து 23-21 எனக் கைப்பற்றினார். வெற்றியை தீர்மானிக்கும் 3-வது செட்டும் பரபரப்பாகவே சென்றது. இறுதியில் பிவி சிந்து 21-19 என 3-வது செட்டை கைப்பற்றினார். இதனால் 12-21, 23-21, 21-19 என பிவி சிந்து வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதிக்கு முன்னேறியதன் மூலம் பதக்கத்தை உறுதி செய்துள்ளார் பிவி சிந்து.

# கொழும்பு டெஸ்டில் நேற்றும் மழையே விளையாடியது



மழையால் கொழும்பு டெஸ்டின் 2-வது நாள் ஆட்டமும் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. நேற்று 30 ஓவர்களே வீசப்பட்டன.

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. காலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2-வது டெஸ்ட் கொழும்பில் நேற்று முன்தினம் தொடங்கியது. மழை பெய்ததால் 90 ஓவர்களும் வீசப்படவில்லை. 36.3 ஓவர்களே வீசப்பட்டது. இதில் இலங்கை அணி 2 விக்கெட் இழப்பிற்கு 85 ரன்கள் எடுத்திருந்தது. கருணாரத்ன 49 ரன்களுடனும், மேத்யூஸ் ரன்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. கருணாரத்ன அரைச்சதம் அடித்து, 65 ரன்களில் ஆட்டமிழந்தார். மேத்யூஸ் 2 ரன்னில் ஆட்டமிழந்தார். 2-வது நாள் மதிய உணவு இடைவேளை வரை இலங்கை 66 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 144 ரன்கள் எடுத்திருந்தது. டி சில்வா 32 ரன்களுடனும், பெரேரா 5 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப் பிறகு தொடர்ந்து மழை பெய்ததால் 2-வது நாள் ஆட்டம் அத்துடன் முடித்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு நாட்கள் ஆட்டம் முடிந்துள்ள நிலையில் இலங்கை அணியின் முதல் இன்னிங்சே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் போட்டி டிரா ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டோனியின் இடத்தை நிரப்பக்கூடியவர் ரிசாப் பன்ட்தான் -விரேந்திர சேவாக்

இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான எம்எஸ் டோனிக்கு சிறந்த மாற்று வீரர் ரிஷப் பந்த் என்று சேவாக் சொல்கிறார்.

இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக இருந்த எம்எஸ் டோனி கடந்த 2014-ல் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

அவருக்கு மாற்று வீரரை தேடும் பணிக்கு டோனி வழிவிட்டது கிடையாது. இந்நிலையில்தான் உலகக்கிண்ண தொடருக்குப்பின் இரண்டு மாதங்கள் விடுமுறை எடுத்துள்ளார். இதனால் மூன்று வகை கிரிக்கெட்டிலும் ரிஷப் பந்த் விக்கெட் கீப்பராக பணியாற்றுகிறார்.

இந்நிலையில் எம்எஸ் டோனிக்கு ரிஷப் பந்துதான் சரியான மாற்று வீரர் என சேவாக் தெரிவித்துள்ளார். இதுகுறித்து சேவாக் கூறுகையில் "டோனிக்கான சிறந்த மாற்று வீரர் ரிஷப் பந்த்-ஆக இருப்பார் என நான் நினைக்கிறேன். டெஸ்ட் போட்டியில் அவர் தனது திறமையை நிரூபித்துள்ளார். தற்போது மீண்டும் ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட்டில் அவரது திறமையை நிரூபிக்கலாம்.

**சேவாக்**

அவர் சிறிது காலம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவரது ஷாட் செலக்சனை சரி செய்துவிட்டால், இந்திய அணியில் நீண்ட காலமாக விளையாடுவார். .இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்களில் அவரை தொடக்க பேட்ஸ்மேனாக பார்க்கலாம். 50 ஓவர் மற்றும் டி20 ஓவர் போட்டிகளில் தொடக்க வீரராக களம் இறங்கக்கூடிய திறமை அவரிடம் உள்ளது" என்றார்.



## பதவி விலகிய
# இரு முஸ்லிம் உறுப்பினர்கள் அமைச்சர்களாகப் பதவியேற்பு





(கொழும்பு)

பதவி விலகிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மீண்டும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றனர். பைசல் காசிம் மற்றும் அலி சாஹிர் மௌலானா ஆகியோர் மீண்டும் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து அமைச்சராக இருந்த றிசாத் பதியுதீன் மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரை பதவி விலகக் கோரி, அத்துரலிய ரத்ன தேரர் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

அத்துடன் பல தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்த நிலையில், அரசாங்கத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என 9 பேர் பதவி விலகினர்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அண்மையில் சில முஸ்லிம் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து நேற்று இரு உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சுப் பதவியை மீண்டும் ஏற்றுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அமைச்சுப் பதவியை மீண்டும் பெற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சு.கவிடம் 3 தெரிவுகளே உள்ளன
## திலங்க பட்டியல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்று தெரிவுகள் காணப்படுகின்றன. முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகும். அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தைகள் மூலமான இணக்கப்பாட்டின் பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கலாம்.


மூன்றாவதாக தேர்தலில் போட்டியிடாமல் எமது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டு, நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இவற்றில் எதனைத் தெரிவு செய்வதென்று இன்னமும் தீர்மானிக்காத நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி எமது முடிவை அறிவிப்போம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த நிலைப்பாட்டை ஆராய்ந்து தீர்மானிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஜனாதிபதியினால் ஐவர் நியமிக்கப்பட்டனர்.

அதேபோன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பிலும் மகிந்த ராஜபக்ஷவினால் ஐவர் நியமிக்கப்பட்டனர்.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்தும், வருங்காலத்தில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்தும் அடுத்தவாரம் நாம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்களுக்காக யாழில் 114 திட்டங்கள் ஆரம்பம் -அங்கஜன்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் யாழ்.வருகையின் போது மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கான 114 செயற்றிட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி குறித்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத் திட்டம் தொடர்பான சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் குறித்த திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## திருவிழாத்திருப்பலி

(அரியாலை)

அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கன்னி திருத்தல வருடாந்தத் திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து அன்னையின் ஆசிர்வாதமும் இடம்பெறும். (ஜ-5-106)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பகுதியில் அமைக்க அனுமதிக்கப்பட்ட சுகாதார நில நிரவுகை செயற்றிட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றலில் இடம்பெறும்.

இது தொடர்பான தெளிவூட்டல்களுக்கு துறைசார் நிபுணர்கள் , யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5-116)

## ஆண்டு விழாவும் முத்தமிழ் விழாவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தின் 42ஆவது ஆண்டு விழாவும், முத்தமிழ் விழாவும் நாளை மற்றும் நாளை மறுதினம் (சனி, ஞாயிறு) இரவு 7.05 மணிக்கு மன்ற முன்றலில் இடம்பெறவுள்ளன.

சனிக்கிழமை நிலையத் தலைவர் முதல்நாள் நிகழ்வு மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறும்.

இதில் விருந்தினர்களாக ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தம்பதியினர், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சீ. சபேசன் மற்றும் நகராட்சி மன்ற சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவீற்றா ஆகியோர் கலந்து கொள்வர்.

கலைநிகழ்வுகளும்இடம்பெறும். ஞாயிற்றுக்கிழமை நிகழ்வில்7.05 மணிக்கு வில்லுப்பாட்டு, கூத்தரங்கம் மற்றும் சிந்துநடை நாடகம் ஆகியன காண்பிக்கப்படும்.(5-30)

## கடும் மழை காரணமாக வெங்காயச் செய்கை பாதிப்பு

(கரணவாய்)

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக வெங்காய செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, அம்பன், குடத்தனை, நாகர்கோவில் பகுதிகளில் இம்முறை அதிகளவானோர் வெங்காய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக வெங்காய தோட்டங்களில் அதிகளவான நீர் தேங்கி காணப்படுவதால் அவை அடி அழுகல் மற்றும் குமயல் நோய்களால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் தோட்டங்களில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கைகளில் வெங்காயச் செய்கையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (5-60)

## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் விரயங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்:** நண்பர்கள் தொடர்பில் சில அலைச்சல்கள் ஏற்படலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் செய்ய போட்ட திட்டங்கள் கைகூடும்.

**மகரம்:** உள்ளம் மகிழும் வகையில் உதவி வருமானங்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**விருச்சிகம்:** உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பெரியோர் உதவியுண்டு.

**கன்னி:** தொழிலில் ஏற்பட்ட மறைமுகப் போட்டிகள் மாறும், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மங்கையர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

இராசி பலன்
கிரகநிலை
சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

சந் | ராகு | சூரி, புத, சுக் செவ் | சனி, கேது | குரு

**24.08.2019**

ஆவணி 07, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

நவமி பின்னிரவு 3.47 மணிவரை

ரோகினி பின்னிரவு 12.55 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

வளவன்

# வைத்திய அதிகாரி சிவரூபன் விடுதலை செய்யப்பட வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பளை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வைத்திய அதிகாரி சிவரூபன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றார்.

மேற்படி வைத்திய அதிகாரி சிவரூபன் கைது செய்யப்பட்ட சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. வைத்திய அதிகாரி சிவரூபன் சட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய காலப்பகுதியில் அரச படைகளின் துன்புறுத்தல்களால் ஏற்பட்ட பாதிப்புக்களை மூடிமறைப்பதற்கு இடமளிக்காது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாகவும் நேர்மையாகவும் துணிச்சலுடனும் செயற்பட்டிருந்தார்.

பளை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்ற பின்னர் வைத்தியசாலையில் பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்பதற்காக வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்துடனும் பிரதேச மக்களுடனும் இணைந்து சிறப்பாகப் பணியாற்றியவர்.

அவர்மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கைது செய்திருப்பதானது அவரைப் பழிவாங்கும் நோக்கம் கொண்ட செயலாகும்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமானது உலகிலுள்ள மிகக் கொடிய சட்டங்களில் ஒன்றாக உள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையானது அச்சட்டத்தை நீக்க வேண்டுமென 2015 ஆம் ஆண்டிலேயே வலியுறுத்தியது. இலங்கை அரசும் அதற்கு இணங்கியிருந்தது. எனினும் இன்று வரை அச்சட்டம் நீக்கப்படவில்லை என்பதுடன் அதன் கீழ் கைதுகளும் சித்திரவதைகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படல் வேண்டுமென நாம் வலியுறுத்துவதுடன் வைத்திய அதிகாரி சிவரூபன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம் என அக்கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-7)




# பிரதேச சபை மாதாந்த அமர்வில் தவிசாளர்-உறுப்பினர் வாக்குவாதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் சபை உறுப்பினர் ஒருவரை சபையில் இருந்து வெளியேறுமாறு கூறியும் குறித்த உறுப்பினர் வெளியேறாததால் தவிசாளர் சபையை ஒத்தி வைத்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போது இடம்பெற்றது.

சாவகச்சேரி -அறுகுவெளிப் பகுதியில் பிரதேச சபையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இயங்கி வருகின்ற உப்பள நிறுவனம் பிரதேச சபை உடனான ஒப்பந்தத்தை மீறுவதாக சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் கு.குகானந்தன் சுட்டிக்காட்டிய போதே தவிசாளர்களுக்கும்-உறுப்பினருக்குமிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு இறுதியில் தவிசாளர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை சபையை ஒத்திவைத்தார்.

உப்பள விவகாரத்தில் தவிசாளர் நடவடிக்கை எடுக்க ஏன் பின்னடிக்க வேண்டும். ஏதாவது கையூட்டு பெற்றீர்களா? என உறுப்பினர் எழுப்பிய கேள்வியால் சினமடைந்த தவிசாளர்.

நான் கையூட்டு பெற்றதை நிரூபிக்க வேண்டும். அல்லது வாபஸ் பெற வேண்டும். அது வரை உறுப்பினரை சபையில் இருந்து வெளியேற்றுகிறேன் எனக் கூறினார். தவிசாளர் கூறியும் உறுப்பினர் சபையை விட்டு வெளியேறாததால் தவிசாளர் சபையை ஒத்தி வைத்தார். சபையின் ஒழுங்கு விதிகளை குறித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர் மீறியதால் அவரை சபையில் இருந்து வெளியேற்றுகிறேன் என தவிசாளர் மேலும் தெரிவித்திருந்தார். தவிசாளர் மீதான ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டை சில உறுப்பினர்கள் எதிர்த்தனர். சில உறுப்பினர்கள் மௌனம் காத்தனர்.

தென்மராட்சி-அறுகுவெளிப் பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியுடன் தனியார் உப்பு நிறுவனம் ஒன்று கடந்த வருடம் உப்பளச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. குறித்த உப்பள நிறுவனம் பிரதேச சபையுடனான ஒப்பந்தத்தை மீறும் பட்சத்தில் உப்பளச் செயற்பாடுகள் முற்றுமுழுதாக நிறுத்தப்படும் எனத் தவிசாளர் சபை உறுப்பினர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

இருப்பினும் தற்போது உறுப்பினர்கள் உப்பள ஒப்பந்தகாரர் மீது குற்றச்சாட்டை முன்வைக்கின்ற போது அதனை ஆராய முற்படாமல் சபைக்கு வருமானம் தான் முக்கியம் எனக் கூறி வருகின்றமை கவலையளிக்கிறது. (5-30)

# தொழில்நுட்பவியல் கல்லூரியின் குறுங்கால கற்கைநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் A/L படித்த மாணவர்களுக்கான குறுங்கால கற்கைநெறிகள் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளன. அந்த வகையில்

- Advancing Career Skills (ACS) English.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் திறமைச்சித்தி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- Developing Carees Skills (DCS) English.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டு.

- Introduction To Working IN AN Office (அலுவலக நடைமுறைகள் அறிமுகம்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம்,தமிழ் உட்பட ஆறு (06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

முற்றிலும் இலவசமான இக்கற்கை நெறிகளை பயில விரும்புவோர் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு தொழில்நுட்பக்கல்லூரியுடன் அல்லது 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்தார். (5)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நாட்டிற்காக ஒன்றிணைவோம் திட்டத்தின் கீழ் அடையாள அட்டையை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம் பெறும்.

முதன் முறையாக தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்வோரும், திருத்தங்கள் செய்வோர், தொலைந்த அடையாள அட்டையை மீள்பெறுவோர் ஆகியோர் இந் நடமாடும் சேவையில் தீர்வைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (இ-5,60)

# வீதியை மூடி எல்லை போட முற்பட்ட புகையிரத திணைக்களத்தினர்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான வீதியை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை புகையிரதத் திணைக்களத்தினர் மூடி அடைத்து எல்லைப்படுத்த முற்பட்டதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டினர்.

சாவகச்சேரி -சிவன்கோவில் தெற்கு வீதி இரண்டாம் ஒழுங்கையையே புகையிரதத் திணைக்களத்தினர் மூடி அடைக்க முற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை புகையிரதத் திணைகளத்தினர் வீதியின் குறுக்காகவும் அயல் வீட்டு காணிகளுக்கு உட்புறமாகவும் தமது எல்லையை அடையாளப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதனை அவதானித்த பொது மக்கள் புகையிரத திணைக்களம் தமது போக்குவரத்து பாதையை மூடி அடைத்து அதனை தமது புகையிரதக் காணியுடன் இணைக்கப் போகிறார்கள் என எண்ணி ஊடகவியலாளர்கள் மற்றும் நகரசபையினருக்குத் தெரியப்படுத்தியதுடன் தாமும் வீதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இருப்பினும் புகையிரதத் திணைக்களத்தினர் தாம் வீதியை மூடி எல்லை போட முனையவில்லை எனவும் தமது காணியை பிரதேச் செயலகத்திற்கு தெரியப்படுத்தவே அடையாளம் இடுகிறோம். மக்கள் அதனைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தனர். அத்துடன் சாவகச்சேரி நகரசபையினர் இது தொடர்பாக அநுராதபுரம் புகையிரதத் திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி தொடர்ந்து வீதியைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுமாறும் கூறினர். இருப்பினும் குறித்த வீதி மற்றும் அயல் காணி போன்றவை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமானவை அல்ல எனப் பொதுமக்கள் ஆணித்தரமாக தெரிவித்துள்ளனர். குறித்த வீதியை மூடினால் ஐந்துக்கும் மேற்பட்ட குடும்பங்களும் வயல் உரிமையாளர்களுக்கும் மாற்றுப் பாதை இல்லாமல் போய்விடும் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர். கடந்த வாரம் கம்பரெலியத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் குறித்த வீதி தார் வீதியாகப் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வித்துறையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" நிகழ்ச்சித் திட்டத்தின் ஏழாவது கட்டம் யாழ்.மாவட்டத்தில் நடத்துவதற்கு ஜனாதிபதி செயலகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், வடமராட்சி மற்றும் தென்மராட்சி ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் தீர்க்கப்படாதுள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் 5 வலயக் கல்வி அலுவலகங்களின் ஒருங்கிணைப்புடன் நாளை மறுதினம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை மாகாணக் கல்வியமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நடமாடும் சேவையில் மத்திய கல்வியமைச்சு (இசுறுபாய) மற்றும் ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நடமாடும் சேவையில் ஆசிரியர், அதிபர் மற்றும் கல்விசார் ஆளணியினர் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமென கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (5)

# மாணவர் கல்விக்கு நிதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஊடாக சுவிஸ் நாட்டு "வலுவிழந்தோரை தாங்குவோம்" அமைப்பினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கல்விநிதி வழங்கல் நிகழ்வு இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.276 அரசடிவீதி, கந்தர் மடத்தில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி மன்ற அலுவலகத்தில் நடைபெறும்.

இதில் சுவிஸ் நாட்டின் "வலுவிழந்தோரை தாங்குவோம்" அமைப்பின் பொறுப்பாளர்களான நா.சந்திரபால, கோபி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர். (5)

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2018 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 21.09.2019 (சனிக்கிழமை), 22.09.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி)<br>மானிப்பாய் | | |
| தெல்லிப்பழை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காற்றுறை | — | | |
| நெல்லியடி | — | | 21.09.2019 (சனிக்கிழமை) |
| அச்சுவேலி | புத்தூர் | 20.09.2019 | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | 22.09.2019 (ஞாயிற்றுக்கிழமை) |
| சுன்னாகம் | கோப்பாய்<br>அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி<br>கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | — | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.போ.இல : 021 222 2601/ 021 222 8602
தொலை நகல் : 021 222 2602
ஈமெயில் : Jafrho@peoplesbank.lk

(C-7344)


# உப்பளப்பயனாளிகள் பாதுகாக்கப்படுவர்

## தவிசாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

அறுகுவெளி உப்பளப் பயனாளிகளுக்குத் தனியார் வங்கியால் ஏற்படும் நட்டத்தில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.வாமதேவன் உறுதியளித்தார்.

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட மக்களை இணைத்து ஆரம்பிக்கப்படும் உப்பளத் திட்டத்தில் பொது மக்களால் தனியார் வங்கியில் வைப்பிலிட்ட பணம் கழிக்கப்படுவதாக தவிசாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தவிசாளர், குறித்த தனியார் உப்பள நிறுவனத்துடன் 33 வருட ஒப்பந்த அடிப்படையில் ஒருவருக்கு ஒரு ஏக்கர் அடிப்படையில் சபைக்குட்பட்ட காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது.

குறித்த பயனாளிகளை தனியார் வங்கியில் கணக்கை ஆரம்பிக்குமாறு தான் அறிவுறுத்தல் வழங்கவில்லை எனவும் சபையின் சில உறுப்பினர்களே அவசரப்பட்டு கணக்கை ஆரம்பித்ததாகவும் குற்றம் சாட்டினார்.

எனினும் தவிசாளர் என்ற ரீதியில் குறித்த பயனாளிகளான பொதுமக்களின் வங்கிக் கணக்கில் இருந்து கழிக்கப்பட்ட பணத்தொகையை மீளச் செலுத்துவதற்கு குறித்த தனியார் நிறுவனம் ஒத்துழைப்பதாகத் தெரிவித்ததாக தவிசாளர் மேலும் கூறினார். (இ-10-114)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# அரச தரப்புடன் இணையவில்லை

## திரிபுபடுத்திய செய்தி குறித்து அனந்தி ஆழ்ந்த கவலை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

மலையக மக்கள் முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு என்னால் வழங்கப்பட்ட செய்தியைத் திரிபுபடுத்தி சில இணையத் தளங்களும் பத்திரிகை நிறுவனங்களும் வெளியிட்டமை மிகுந்த கவலை அளித்துள்ளது என ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொணரும் முகமாகவும் அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் அவர்களுடன் இணைந்து பயணிப்போம் என்று நான் குறிப்பிட்ட தோடு மக்கள் முன்னேற்ற கழகத்தில் பல மலையகத்தில் உள்ள கட்சிகளில் இருந்து வெளியேறியவர்களும் இணைய விருப்பம் தெரிவித்ததை அதன் தலைவர் குமார் தெரிவித்தார்.

இந்தச் செய்தியைத் திரிபுபடுத்தி, நான் மைத்திரியின் தமிழ்ப்பிரிவு கட்சியுடன் இணைந்ததாக இணையத்தளங்களில் உலாவவிட்டுள்ளனர்.

நான் வேட்பாளராக அறிமுகமாகிய காலம் தொடக்கம் அரசுடன் இணைந்தேன், இணைகிறேன் என்றெல்லாம் எழுதிய வண்ணமே உள்ளனர். ஊடகச் சந்திப்பில் மிகத் தெளிவாக ஊடகவியலாளர்களுடன் பேசிய பின்னரும் இவ்வாறான திரிபுபடுத்திய செய்தியை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசிற்கு நானும் என் சார்ந்த கட்சியும் என்றுமே அடிபணியாது.

வாழ்த்துவோர் வாழ்த்தட்டும். தூற்றுவோர் தூற்றட்டும். என் கடமையை நான் செவ்வனே நிறைவேற்றுவேன். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கும் ஊடகங்கள் ஒழுக்க நெறியின் பால் நின்று எனது கருத்துச் சுதந்திரத்திற்கும் மதிப்பளிக்க வேண்டும் என்று கோரி நிற்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாவின்

# குடியுரிமை பிரச்சினையை தூக்கிப்பிடித்துக்கொண்டு நாம் அரசியல் செய்ய முடியாது

## மகிந்த அணி முன் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)

எங்கள் வேட்பாளரை இன்று முழு நாடும் "யார் அவர்" என தேடுகிறது. இதுவே எங்கள் வெற்றிகரமான இராஜதந்திரம். முழு நாட்டின் அவதானத்தையும் எம் பக்கம் நாம் இன்று திருப்பியுள்ளோம். உரிய வேளையில் எமது வெற்றி வேட்பாளரை நாம் அறிவிப்போம். ஆனால் அந்த அறிவிக்கும் வேளையை நாமே தீர்மானிப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தாவின் குடியுரிமை விவகாரம், ஒரு சட்ட விவகாரம். அதை அமெரிக்க அரசும், இலங்கைத் தேர்தல்கள் ஆணையகமும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் பார்த்துக்கொள்ளட்டும். அந்தக் குடியுரிமை பிரச்சினையை கட்டிப்பிடித்துக் கொண்டும், தூக்கிப்பிடித்துக்கொண்டும், நாம் அரசியல் செய்ய முடியாது. அப்படி செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உதய கம்மன்பில, இந்திக அநுனுருத்த, ஐக்கிய தேசியக் கட்சியின் ஹெக்டர் அப்புஹாமி ஆகிய எம்.பிக்களும் கலந்து கொண்ட சிங்கள மொழியிலான விவாதத்தில் அமைச்சர் மனோ மேலும் தெரிவிக்கையில்,

உருவாகிவரும் எங்களது



ஜனநாயக தேசிய முன்னணிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன தெரியுமா? அது புரிந்துகொள்ள மிகவும் இலகுவானது. ஆனால், அதை உங்களில் பலர் புரிந்து கொள்ளத் தவறுகிறீர்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையில் இருப்போர் ஒரு குடும்ப அங்கத்தவர்கள். எமது ஜனநாயக தேசிய முன்னணி தலைமையில் இருப்போர் பல கட்சிகளின் அங்கத்தவர்கள். எனவே உங்கள் தலைமைக் குடும்பமான ராஜபக்ஷ குடும்பத்தில்தான் ஒருவரை நீங்கள் வேட்பாளராகப் போட வேண்டும். போட்டும் உள்ளீர்கள். இனி வருங்காலத்தில் ஒருவேளை நீங்கள் வென்றால், பிரதமர் மற்றும் பிரபல அமைச்சர்கள் எல்லோருமே ராஜபக்ஷ குடும்ப அங்கத்தவர்கள்தான். இந்தக் குடும்பத்துக்கு வெளியே தகுதியானவரைத் தேடிப்பார்க்க உங்களால் முடியாது. அதுதான் உங்கள் ஜனநாயகம்.

ஆனால், நாங்கள் எங்களது ஜனநாயக தேசிய முன்னணியிலே, கட்சி அங்கத்தவர்களில் இருந்தே தகுதியானவரை நாம் தேடி நியமிக்கிறோம். இதுதான் எங்கள் ஜனநாயகம். குடும்பமா? கட்சியா? எங்கே ஜனநாயகம் உள்ளது என்பதைத் தேடிப்பாருங்கள். அதற்காக ஒரே குடும்பத்தில் இருந்து பலர் அதே கட்சிக்கு உள்ளே வருவதை நான் மறுக்கவில்லை. தென்னாசியாவில் இது வழமை. உலகிலும் பல நாடுகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் ஒரே கட்சியில் இருக்கிறார்கள். இந்த விடயமோ அல்லது உங்கள் வேட்பாளர் கோத்தபாயவின் இரட்டை குடியுரிமை பிரச்சினையோ எனக்கு முக்கியமில்லை.

ஒரே குடும்பம் என்பதால்தான் உங்களால் தாமதமில்லாமல் வேட்பாளரை அறிவிக்க முடிந்தது. இதே காரணத்தால்தான் நாம் இன்னமும் எமது வேட்பாளரை அறிவிக்கவில்லை. இது ஒரு ஜனநாயக தாமதம். இதை புரிந்துகொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையிலிருந்து தமிழகத்திற்குள் ஆறு பயங்கரவாதிகள் ஊடுருவல்!

## உளவுத்துறை எச்சரிக்கை

(சென்னை)

**இலங்கையிலிருந்து ஆறு பயங்கரவாதிகள் தமிழகத்திற்குள் ஊடுருவியிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்ததையடுத்து தமிழகம் முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.**

இதன்படி சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தி வருகின்றனர்.

அத்துடன் இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதுடன் வாகனங்களும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதேபோல் கடலோரப் பகுதிகளை பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

சந்தேகத்திற்குரிய நபர்களோ, படகுகளோ தென்பட்டால் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது. (இ-7)

# காலாவதியானது அவசரகாலச் சட்டம்

## இனி நீடிக்கப்படாது - அமரதுங்க நம்பிக்கை

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலிருந்து வந்த அவசரகாலச் சட்டம் நேற்று முன்தினத்துடன் காலாவதியாகியது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர், நாடாளுமன்ற ஒப்புதலுடன், அவசரகாலச் சட்டத்தை, ஜனாதிபதி மாதம் தோறும் நீடிப்புச் செய்து வந்தார்.

இந்நிலையில், கடந்த ஜூலை 22 ஆம் திகதி நீடிப்புச் செய்து வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்ட வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினத்துடன் காலாவதியானது.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்புச் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு எதையும் ஜனாதிபதி வெளியிடவில்லை. இதனால் அவசரகாலச்சட்டம் இனி நீடிக்கப்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டு வந்த போதும், இரண்டு பிரதான கட்சிகளும் அதற்கு ஆதரவளித்து வந்தன.

இந்நிலையில் அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படமாட்டாது என நம்புவதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். (இ-7)

# ஹபரண காட்டுப் பகுதியில் கடற்படை சிப்பாய் உட்பட இருவரின் சடலங்கள் மீட்பு




(ஹபரண)

ஹபரண காட்டுப் பகுதியிலிருந்து மர்மமான முறையில் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

ஹபரண - மின்னேரிய காட்டின் நுழைவாயிலிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலிருந்து மனித எச்சங்கள் சில பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளுக்கமைய இறந்தவர்களில் ஒருவர் ரிக்கிலகஸ் கட்டுவ பகுதியைச் சேர்ந்த 27 வயது கடற்படைச்சிப்பாய் என தெரியவந்தது.

எனினும் உயிரிழந்த மற்றுமொரு நபர் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

இச்சம்பவம் குறித்து மின்னேரிய பொலிஸார் மேலதிக விசாரணைக்ளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வடகடல் நிறுவன மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

அரச நிதியை மோசடி செய்தமை குறித்து, வடகடல் நிறுவனம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

வடகடல் நிறுவனம், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

இதற்கமைய, குறித்த நிறுவனத்தின் கீழ் லுனுவில,வீரவில மற்றும் யாழ்ப்பாணம் குருநகர் பகுதிகளில் மூன்று மீன்பிடி வலை தயாரிப்பு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், குறித்த மீன்பிடி வலைத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு, உரிய விலை மனுக்கோரலின்றி தரக்குறைவான நூல்களை இந்திய நிறுவனமொன்றின் ஊடாக இறக்குமதி செய்ததன் ஊடாக, அரச நிதியை மோசடி செய்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்துடன், குறித்த நூல்கள் கொழும்பு துறைமுகத்தினூடாக கொண்டுவரப்பட்டதையடுத்து, அவை வடகடல் நிறுவனத் தலைவரின் கீழ் இயங்கும் போக்குவரத்து சேவை நிறுவனமொன்றின் ஊடாக யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, குறித்த நூல் தொகை வீரவில மற்றும் லுனுவில நிறுவனங்களுக்கும் எடுத்து செல்லப்பட்டுள்ளன.

இதன்போது, போக்குவரத்துக்காக, அமைச்சின் வாகனங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றைக் கொண்டு செல்வதற்காக வடகடல் நிறுவனத்தின் தலைவர் தனக்கு சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்துடன், வலைத் தயாரிப்புக்காக TORAY மற்றும் V.T.F போன்ற அதி தரத்துடனான நூல்களை இறக்குமதி செய்ய முடிந்த போதிலும் வடகடல் நிறுவனம், குறைந்த தரத்திலான நூல்களையே இறக்குமதி செய்துள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதற்கமைய, இந்த விடயம் தொடர்பில் கடந்த 30 ஆம் திகதி வடகடல் நிறுவனத்தின் தலைவர் எஸ்.ரி.பரமேஸ்வரம், அதன் பொது முகாமையாளர் மற்றும் கணக்கதிகாரி ஆகியோரிடம் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டது.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஐ.தே.க.என்ற புதையலை ரணிலே பாதுகாத்து வருகிறார்

## வீரகுமார சீண்டல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி என்ற புதையலை ரணில் விக்கிரமசிங்கவே பாதுகாத்து வருகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தெளிவான அரசியல் வேலைத் திட்டம் ஒன்றுள்ளது.

சுதந்திரக் கட்சிக்கு தெளிவான ஒரு அரசியல் பாதையும் தெளிவான அரசியல் நிலைப்பாடும் இருப்பதால் எப்போதும் அந்தக் கட்சி சரியான முடிவுகளையே எடுக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி என்ற புதையலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பாதுகாத்து வருகின்றார்.

எனவே, அவரிடமிருந்து தலைமைப் பதவியைப் பெற வேண்டுமாக இருந்தால் பலி கொடுத்து ஐக்கிய தேசியக் கட்சி என்ற புதையலை அவரிடமிருந்து பெற வேண்டும். அது அவர்களின் வேலை. மாறாக அது எங்கள் பிரச்சினையல்ல.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியினர் நோயுற்றவர்களுக்கு நல்ல மருந்து எது என்பதை அறிந்து செயற்பட வேண்டுமே தவிர, சுதந்திர கட்சி மீது தேவையற்ற விதத்தில் குற்றம் சுமத்துவதில் நியாயமில்லை' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரூ.ஒரு கோடியே 30 இலட்சம் செலவில் வேலணையில் இரு வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட இரு வீதிகள் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் புன்ரமைக்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

மாகாண சபையால் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட சிற்பனை வீதியைப் புனரமைக்க 70 இலட்சம் ரூபாவும் நயினாதீவு நாவலடி வீதியைப் புனரமைக்க 60 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டதாகத் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# நாட்டின் பாதுகாப்பை கருத்திற்கொண்டால் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தலாம்-நளின்

(கொழும்பு)

**நாட்டின் பாதுகாப்பை மாத்திரம் கருத்திற்கொண்டு ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்தால் நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தி சிறந்த பாதுகாப்பைப் பெறலாம் எனப் பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் பல ஆட்சித்தலைவர்களின் காலம் இருந்தது. ஆனால் எதிர்வரும் காலம் மக்களின், விவசாயிகளின் காலமாக ஏற்படுத்த வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலின் மூலம் கிடைக்கின்றது. அதற்கு தகுதியுள்ள தலைவரை உருவாக்கும் தேவை மக்களிடம் உள்ளது.

மேலும் பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வேட்பாளர் அறிவிக்கப்பட்டார்.

இவர்களின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது பாதுகாப்பு குறித்து மட்டும் தான் பேசுகிறார்.

நாட்டிற்கு பாதுகாப்பு மாத்திரம்தான் பிரதானமானது என்றால் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தினால் சிறந்த பாதுகாப்பை ஏற்படுத்தலாம்.

எனவே மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு சாதாரண மக்களின் உணர்வுகளை மதிக்கக்கூடிய ஒருவரையே நாங்கள் நியமிப்போம்.

இதன் மூலம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்கள் யுகத்தை ஏற்படுத்துவோம் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# எந்தத் திட்டமிடலும் இல்லாது வடக்கில் வீட்டுத் திட்டங்கள்

## நாடாளுமன்றில் சாள்ஸ் விசனம்

(கொழும்பு)

வடக்கில் எந்த திட்டமிடலும் இல்லாமலேயே வீட்டுத்திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மக்கள் தங்கள் நகைகளை அடகுவைத்தே வீட்டின் மிகுதிப் பகுதியை அமைக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் வடக்கில் மாதிரிக் கிராம வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிகமான வீட்டுத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் வீடுகள் வழங்கப்படுகின்ற போதும் அந்த மக்களுக்கான நிதி வழங்கப்படாதிருக்கின்றன. எனவே அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் சரியாக முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. மக்கள் கடன் பட்டும் நகைகளை அடகு வைத்தே வீட்டின் மிகுதிப் பகுதியை அமைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என விசனம் வெளியிட்டார். (இ-7)

# ஆட்சி மாற்றத்தின் பின்னர் 19 ஆவது திருத்தம் மாற்றியமைக்கப்படும்


(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகாரப் போட்டியை ஏற்படுத்தியுள்ள அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து முழுமையாக மாற்றியமைக்கப்படும் என்றும் நாட்டின் நலன்களை கருத்திற் கொண்டு 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்படவில்லை. ஒரு குடும்பத்தை இலக்காகக் கொண்டே இத் திருத்தம் அமுல்படுத்தப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் சுட்டிக் காட்டினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# பிரதமர் ரணில் தன்னைப்பற்றி சுய விமர்சனம் செய்வது அவசியம்

## அரவிந்தகுமார் வலியுறுத்து



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்குள்ள பலம், பலவீனம் தொடர்பில் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் அருணாசலம் அரவிந்தகுமார் வலியுறுத்தினார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் காணப்படும் விரிசல் நிலைமை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இருவருக்கும் இடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் அமையவுள்ள பொதுக் கூட்டணி தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சிந்திக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.



வெறுமனே உள்வீட்டுக்குள் உள்ள பிரச்சினைகளுக்கும் அதிகாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெறாமல் பொதுக் கூட்டணியை அமைத்து மக்கள் மத்தியில் செல்வதில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே பிரதமர் தன்னைப் பற்றிய முழு சுயவிமர்சனம் ஒன்றை செய்துகொள்வதே, தற்போதைய நிலைமையில் அத்தியாவசியமானது எனவும் அரவிந்தகுமார் எம்.பி.தெரிவித்தார். (ஐ)

# பல்கலை. மாணவன் மயக்கமுற்று மரணம்

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் ஒருவர் நேற்றுக் காலை மயக்கமுற்றதில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

தன்சில்வத்த, பூண்டுலோயாவைச் சேர்ந்த 24 வயதான ஜெ.துர்கேஸ்வரன் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் 03 ஆம் வருடக் கற்கை நெறியில் கல்வியைத் தொடர்ந்து வந்த நிலையில் நேற்று அதிகாலையில் பல்கலைக்கழகத்தில் மயக்கமுற்ற நிலையில் சுயநினைவின்றி காணப்பட்டதனை அவரது சக பீட மாணவர்கள் அவதானித்துள்ளனர்.

இதனை அடுத்து பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதன் பின்னர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளித்த நிலையில். சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இம்மாணவனின் உயிரிழப்பு தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், இது தொடர்பிலான தகவல் எதனையும் ஊடகங்களுக்கு வழங்கப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மறுப்புத் தெரிவித்தனர். (ஐ)

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிற்கு இரு நாள் காலக்கெடு

(கொழும்பு)

நேற்று முன்தினம் காலை 8 மணிமுதல் இன்று காலை 8 மணிவரையான அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்திற்கு இரண்டு நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

அதன்போதும் தீர்வு காணப்படாவிடின் முழுமையான வேலை நிறுத்தத்தில் இறங்க வுள்ளதாக எச்சரித்துள்ளது.

அரசாங்க வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு, உரிய வகையில் வைத்தியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படாமை உள்ளிட்ட 8 பிரச்சினைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை தெரியப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே தெரிவித்ததாவது,

சுகாதாரத்துறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்த போதிலும் இதுவரையில் எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தராவிடின் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வோம் என கூறியிருந்த போதிலும் எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஆளுநர் தலைமையில் 'தொட்டணைத்தூறும் மணற்கேணி'

# திருக்குறள் பெருவிழா முல்லைத்தீவில் நேற்று ஆரம்பம்





(முல்லைத்தீவு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைவாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் நெறிப்படுத்தலின் கீழ் வடமாகாணத்தில் முதன்முறை இடம்பெறும் திருக்குறள் பெருவிழா "தொட்டணைத்தூறும் மணற்கேணி" என்னும் தலைப்பில் முல்லைத்தீவு ஊற்றுங்கரை சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

வடமாகாண கல்வி அமைசசின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் ஆளுநரால் திருக்குறள் புத்தகம் மற்றும் திருக்குறள் ஸ்டிக்கர் என்பன வெளியிடப்பட்டதுடன் நிகழ்வில் ஆளுநரால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மாணவர்கள் இருவருக்கு திருக்குறள் படம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், கல்வி திணைக்கள் அதிகாரிகள், ஆசிரியார்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9)

# வைத்தியரை விடுவிக்கக்கோரி பளையில் ஆர்ப்பாட்டப் பேரணி



(பரந்தன்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பளை வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபனை விடுவிக்கக் கோரி பளைப் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேச வைத்திய சாலை முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இக் கவனயீர்ப்புப் பேரணியில் விடுதலை செய் வைத்தியரை விடுதலை செய், நிறுத்து நிறுத்து சட்டத்தின் முன் நிறுத்து, நீக்கு நீக்கு பயங்கரவாத சட்டத்தை நீக்கு என்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பளைப் பிரதேச செயலகம் வரை சென்றனர். அங்கு ஜனாதிபதிக்கான



கோரிக்கை மகஜர் ஒன்றினை பிரதேச செயலக அதிகாரியிடம் கையளித்தனர்.

அத்துடன் வைத்தியரை சட்டத்தின் முன் நிறுத்தாத பட்டச்த்தில் பாரியளவிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். இப் போராட்டத்தில் பொதுமக்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (9-312)

# வவுனியாவிலிருந்து நல்லூருக்கு வேல் தாங்கிய பாதயாத்திரை ஆரம்பம்



(நெளுக்குளம்)

வவுனியாவிலிருந்து வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் வேல்தாங்கிய பாத யாத்திரை நேற்று வவுனியா விலிருந்து ஆரம்பமாகியது.

வேப்பங்குளம் ஸ்ரீபத்திர காளி அம்மன் ஆலயத்திலிருந்து சாமி அம்மா தலைமையில் 9ஆவது தடவையாக நேற்று காலை யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தை நோக்கிய வேல் தாங்கிய பாத யாத்திரை ஆரம்ப மாகியது.

வவுனியாவிலிருந்து ஏ-9 வீதியால் செல்லும் குறித்த யாத்திரை வீதியிலுள்ள ஆலயங்களில் தரித்து நின்று செல்லவுள்ளதுடன் எதிர்வரும் 29ஆம் திகதி தேர்த் திருவிழாவன்று நல்லூர் திருத்தலத்தை சென்றடையவுள்ளது.

பிரதான வீதியிலுள்ள ஆலயத்தின் நிர்வாக சபையினர் வேல்தாங்கிய பாத யாத்திரையில் கலந்துகொள்ளும் அடியார்கள் தங்களது ஆலயங்களில் தங்கியிருக்கும் தினத்தில் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (9-299)




# அழைப்பிதழில் எழுத்துப்பிழை




(நெளுக்குளம்)

வடக்கில் நேற்று ஆரம்பமாகிய திருக்குறள் பெருவிழா அழைப்பிதழில் பல்வேறு எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

ஜனாதிபதியின் எண்ணக் கருவிற்கு அமைய வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெறவுள்ள திருக்குறள் பெருவிழாவின் அழைப்பிதழில் பல்வேறு எழுத்துப்பிழைகள் காணப்படுவதாகவும் தமிழ் நிகழ்வு ஒன்றின் அழைப்பிதழில் இவ்வாறான எழுத்துப்பிழைகள் சரி செய்யப்படவில்லை என்றும் சமூக ஆர்வலர்களினால் விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. (9-299)

# வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

## மஸ்தான் எம்.பி.தெரிவிப்பு

(நெளுக்குளம்)

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு விவசாயம் பிரதான இடம் வகிக்கிறது. வன்னி மாவட்டத்திலும் பெருமளவு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் எமது விவசாயிகளுக்கு அரசாங்கம் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் எமது விவசாயிகள் மாத்திரமல்ல நாட்டின் பொருளாதாரமும் மேம்பாடடையும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் அளிக்கும் இந்த ஊக்குவிப்பானது சுய தேவைக்கான விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களை வர்த்தக ரீதியான விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக மாற்ற முடியும்.

வன்னியில் பெருமளவாகக் காணப்படுகின்ற வளம் மிக்க நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் விவசாயத்திற்கு பெயர் போன பிரதேசமாகக் காணப்படும் மாதோட்டம் புராதன காலந்தொட்டு இன்று வரையிலும் விவசாயத்தில் சிறப்பான பகுதியாக விளங்குகிறது.

எனினும் எமது வன்னி மாவட்டத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்துடனேயே விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையைப் போக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

இன்று வன்னி மாவட்டத்தில் விவசாயிகள் கடும் கஷ்டத்துக்கு மத்தியில்தமது விவசாயத்தொழிலை முன்னெடுத்து வருகின்றனர். நீரைத் தேக்கி வைத்து விவசாயத்தை முன்னெடுக்க பாழடைந்த குளங்களை சிறந்த முறையில் புனர்நிர்மாணம் செய்ய வேண்டும்.

இதுதவிர விவசாயிகளின் ஊக்குவிப்புத் திட்டங்கள், காப்புறுதிகள், மானிய அடிப்படையில் சலுகைகள், சிறந்த சந்தை வாய்ப்புக்கள் போன்றவற்றில் அரசு இன்னும் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு விவசாயிகளின் முன்னேற்றத்தில் அரசு செலுத்துகின்ற கவனம் நாட்டில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்திலும் செல்வாக்குச் செலுத்துவதுடன் விவசாயிகளிடத்தில் சிறந்த நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் எனவும் மேலும் தெரிவித்தார். (9-299)

# பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தினால் நடத்தப்பட்ட திருக்குறள் எழுத்துத் தேர்வு மற்றும் நாவன்மைப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சங்கத்தின் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசாக திருக்குறள் திருவுருவப் படமும் திருக்குறள் நூலும் வழங்கப்படவுள்ளது.

பரிசில் பெறும் மாணவர்களுக்கான கடிதங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் தமிழ்ச்சங்கத்தின் பொதுமக்கள் தொடர்பு அலுவலரின் 077 470 1820 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)


## மாந்தை கிழக்கு பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

# வடகாடு கிராமத்திலிருந்து அச்சத்தால் வெளியேறும் குடும்பங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் வடகாடு கிராமத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள காரணத்தினால் அக்கிராமத்தில் இருந்து குடும்பங்கள் வெளியேறத் தொடங்கியுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாந்தை கிழக்கின் ஒட்டறுத்தகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள வடகாடு கிராமத்தில் கசிப்பு உற்பத்தி உட்பட அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்களினால் குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும் மாங்குளம் பொலிஸார் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் வடகாடு கிராமத்தில் இருந்து குடும்பங்கள் வெளியேறப் போவதாகத் தெரிவித்தனர்.



இந்நிலையில் தற்போது இரு குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி கிராமத்தில் இருந்து வெளியேறியுள்ளனர். வடகாடு கிராமத்தில் காணப்படுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை மாங்குளம் பொலிஸார் கட்டுப்படுத்தத் தவறியதன் விளைவாகவே தற்போது குடும்பங்கள் வெளியேறி வருகின்றன. இந்நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் வடகாடு கிராமத்தில் இருந்து குடும்பங்கள் வெளியேறாமல் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (9-350)




## கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத்தெரிவு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குளம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகம் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரம் பொது நோக்கு மண்டபத்தில் ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நீர்ப்பாசனத் திணைக்களம், அக்கராயன் கமநல சேவை நிலையம் ஆகியவற்றின் அதிகாரிகள், அக்கராயன், கண்ணகைபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் முன்னிலையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் புதிய தலைவராக சி.கனக சபாபதி தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக முத்தையா சிவகுமாரும் பொருளாளராக கிருஸ்ணபிள்ளை சிவநேசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். உறுப்பினர்கள் எட்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9-350)

## வயல்களில் தீவைக்கும் விவசாயிகளுக்கு

# எதிராக கடும் நடவடிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக அறுவடையின் பின்னர் வயல் வெளிகளில் காணப்படும் வைக்கோலுக்கு தீ வைக்கும் விவசாயிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கையின் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டு அறுபது வீதமான காணிகள் அறுவடை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நெல்லை அறுவடை செய்த விவசாயிகள் வயல் நிலங்களில் காணப்படுகின்ற வைக்கோலுக்கு தீ வைத்து வருகின்றனர். இயற்கைப்பசளையாக காணப்படுகின்ற இந்த வைக்கோலுக்கு தீ வைக்கப்பட்டு வருகின்றது.



இவ்வாறு வயல் நிலங்களில் காணப்படுகின்ற வைக்கோலை தீ வைத்துக்கொளுத்த வேண்டாம் என பலதடவைகள் கமநலசேவை நிலையத்தால் அறிவித்தல் விடுத்தபோதும் விவசாயிகள் வைக்கோலுக்கு தீ வைத்து வருகின்றனர்.

அறுவடை மேற்கொண்ட வயல் நிலங்களில் வைக்கோலுக்கு தீ வைக்க வேண்டாம் என்றும் அவ்வாறு தீ வைக்கும் விவசாயிகள் பற்றிய விபரங்களை கமநலசேவை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறும் பிரதேச கமக்கார அமைப்புக்களை கமநலசேவை நிலையம் கேட்டுள்ளதுடன், இவ்வாறான விவசாயிகள் அடையாளம் காணும் பட்சத்தில் எதிர்காலத்தில் அவர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் நிறுத்தப்படும் என கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# அவசரகாலச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர் விடுவிப்பு

(மன்னார்)

அவசரகாலச் சட்டம் மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைக்கான சாசன சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞன் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை தொடர்ந்து அமுல்ப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் மன்னார் காட்டாஸ்பத்திரி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சமூக வலைத்தளம் ஊடாக பிரிவினையை ஏற்படுத்தும் கருத்துக்களை பதிவு செய்தார் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவருக்கான பிணை விண்ணப்பம் மேல் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கானது நேற்று மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து பெற்ற ஆலோசனையின் படி குறித்த இளைஞன் இவ் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். (9-285)

# முறையற்ற கழிவு முகாமைத்துவம்; உமையாள்புரம் மக்கள் விசனம்

(கிளிநொச்சி )

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் முறையற்ற கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட உமையாள்புரம் பகுதியில் இவ்வாறு முறையற்ற வகையில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றமை தொடர்பில் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கழிவு முகாமைத்துவம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் பல தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் கரைச்சி பிரதேச சபையினர் கழிவகற்றல் மற்றும் பாதுகாப்பான முறைகள் என்பன தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

இதன் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். குறித்த கழிவுகளிற்கு தீவைத்துள்ளமையால் அப்பிரதேசம் புகை மண்டலமாக காணப்பட்டதுடன், கொட்டப்பட்ட கழிவுகளை கால்நடைகள், விலங்குகள் என பலவும் உணவாக உட்கொள்ளும் காட்சிகளையும் காணமுடிந்தது.

இந்த நிலையில் குறித்த கழிவுகள் கொட்டப்படும் பகுதியிலிருந்து சுமார் 500 மீற்றர்களுக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.



குறித்த கழிவகற்றல் முகாமைத்துவத்திற்காக நிரந்தர தீர்வு எட்டப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் அவை இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கும் மக்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட பகுதி தவிர்ந்து ஏனைய பகுதிகளிலும் கழிவுகள் கொட்டப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக தாம் சுகாதார பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் நோய்த்தாக்கத்திற்கு ஆளாவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# மன்னார் சாந்திபுரம் பிரதான பாதையில் போடப்பட்ட கழிவுகளை அகற்றுமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் எமில் நகர் பிரதான பாதையில் புதிய பாலம் அமைப்பதற்காக இடிக்கப்பட்ட பழைய பாலத்தின் கட்டுமான கழிவுகள் மற்றும் கொங்கிறீட் கழிவுகள் குறித்த கிராமத்தில் மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் பல வருடங்களுக்கு முன்பாக கொட்டப்பட்டுள்ளது.

இருந்தும் குறித்த புதிய பாலத்திற்கான கட்டுமான வேலைகள் நிறைவடைந்து பல வருடங்கள் ஆகியும் கொங்கிறீட் மற்றும் கட்டுமானக் கழிவுகள் இதுவரை அகற்றப்படவில்லை எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்து குறித்த கழிவுகளை அகற்றித்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் கட்டுமான கழிவுகள் உட்பட பாரிய அளவு கொங்கிறீட் கட்டுமான தூண்கள் அகற்றப்படாமல் கிடப்பதால் குறித்த பகுதியில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் பாரிய முட் புதர்கள் காணப்படுவதனால் பாம்புகள் போன்ற விலங்குகளும் கட்டுமான கழிவுகள் கொட்டப்பட்ட பகுதிகளில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மேற்படி பகுதிகளில் மக்கள் குப்பைகளை கொட்டுவதாலும் காற்றின் காரணமாக குப்பைகள் தேங்குவதால் மழை காலங்களில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பைகளில் நீர் தேங்கி டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த கொங்கிறீட் மற்றும் கட்டுமானக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-285)





**வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய 1997 ஆம் ஆண்டு பழைய மாணவர்களான நடராஜா செல்வகுமார், கி.குறூஸ், ஞா.ஜினேஸ் ஆகியோரின் நிதி உதவியில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 50 மாணவர்களுக்கு பல்வேறு உதவிகள் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 வசதியற்ற மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், 20மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் என்பன வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.**

**(நெடுக்குளம் செய்தியாளர்)**




# உ.பியில் கனமழை; 20 பேர் உயிரிழப்பு!

(லக்னோ)

உத்தரப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். தென்மேற்கு பருவமழை வட மாநிலங்களில் தீவிரமாகப் பெய்து வருகிறது.



கன மழை காரணமாக உத்தரப்பிரதேசத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பெரும்பாலான ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

ஆற்று வெள்ளம் ஊருக்குள் புகுந்ததால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

கங்கை, யமுனை நதிகளும் கரை கடந்து பாய்கின்றன. இதனால், ஏராளமான வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கின.

இதில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். (ஜ-2)

## 3 ஆவது நாட்டின் தலையீடு வேண்டாம்

# காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் இந்தியா-பாக்.பேச்சு நடத்த வேண்டும்

## இந்தியப் பிரதமரிடம் பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்து

(பாரிஸ்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாவது நாடு தலையீடு இருக்கக் கூடாது என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசமுறைப் பயணமாக பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றார். பாரிஸ் நகர விமான நிலையத்தில் அவரை பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் வரவேற்று சிவப்பு கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது.

பின்னர் சான்டிலி பகுதியில் உள்ள பிரபல அரண்மனையில்



மோடியை, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் வரவேற்றார். அரண்மனையின் தனி அறையில் இருவரும், பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதித்தனர். சுமார் 90 நிமிடங்கள் இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது. பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தெரிவிக்கையில்,

காஷ்மீர் பிரச்சினையை இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இதில் மூன்றாவது நாடு தலையிடவோ, வன்முறையை தூண்டவோ கூடாது. அந்த பிராந்தியத்தில் அமைதியான சூழலை ஏற்படுத்த வேண்டும். மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இன்னும் சில தினங்களில் பாகிஸ்தான் பிரதமரிடமும் பேசவுள்ளேன். அப்போது காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இரு தரப்பு மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கூறுவேன் என மேலும் தெரிவித்தார்.(ஜ-2)

# இனி இந்தியாவுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை

## பாகிஸ்தான் பிரதமர் திட்டவட்டம்

(இஸ்லாமாபாத்)

இனி இந்தியாவுடனான பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்ட விவகாரத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் சுமுகமான பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாடுகள் வலியுறுத்தின.

இதற்கிடையே இந்தியாவும் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஒழித்தால் மட்டுமே பேச்சுவார்த்தை என அறிவித்துள்ள நிலையில் இம்ரான்கான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து தொடர்ந்து தெரிவித்த அவர், “பாகிஸ்தானில் இயங்கி வரும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆனால் பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக நம்பத்தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சு நடத்தப்படும் என்று இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது.

இனிமேல் செய்வதற்கு எதுமில்லை. இருப்பினும் இந்தியா தொடர்ந்து குறை கூறி வருகிறது.

இந்தியாவில் இருப்பவர்களை சமாதானப்படுத்தவே இந்தியா அவ்வாறு கூறுவதாக எண்ணத் தோன்றுகிறது. எனவே, இந்தியாவுடன் பேசுவதற்கு எந்த விடயமும் இல்லை எனத் தெரிவித்தார். (ஜ-2)




# பூமியின் நு

## பல்லாயிரக்

## பிரான்

(பாரிஸ்)

“பூமியின் நுரையீரல்” எ
தால் பல்லாயிரக்கணக்கா
யாகிக்கொண்டிருக்கின்ற



உலகின் மிகப்பெரிய இயற்கைக் காடாக விளங்குவது அமேசன் மழைக் காடுகள்.

பிரேசில் மற்றும் கொலம்பியாவிற்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படும் இந்த காடுகள், உலகின் வேறு எந்தப் பகுதி

# நளினியின் பரோ

(சென்னை)

இந்தியாவில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பரோலில் வெளியே வந்திருக்கும் நளினிக்கு மேலும் 3 வாரங்கள் பரோலை நீட்டித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

30 நாள் பரோலில் வெளியே வந்துள்ள நளினி, தனது மகளின் திருமண ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். பரோல் முடிவதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அதனை உயர் நீதிமன்றம் நீட்டித்துள்ளது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக பேரறிவாளன், முருகன், நளினி, ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன் உட்பட 7 பேர் கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் தண்டனை அனுபவித்து

# விடுவிக்கப்படவுள்ள



(சூரிச்)

ஈரானால் கைப்பற்றப்பட்ட பிரிட்டன் எண்ணெய்க் கப்பல் விரைவில் விடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

சுவீடன் வெளியுறவுத் துறை அமைச்சகத்தினை மேற்கோள்காட்டி ஸ்வீடிஷ்


# வெளிநாடு


# நுரையீரலான அமேசன் காட்டில் தொடரும் அவலம்


# ரக்கணக்கான மரங்கள், உயிரினங்கள் தீக்கிரை!


## ான்ஸ் ஜனாதிபதி கவலை

**ரல்" என அழைக்கப்படும் அமேசன் காட்டில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ள ணக்கான மரங்கள் எரிந்து நாசமாகியதுடன் உயிரினங்களும் தீக்கிரை கின்றன.**









களிலும் காணக்கிடைக்காத அரிய வகை மரங்கள், விலங்குகள், பறவைகள் எனப் பல்வேறு உயிரினங்களின் வாழ்விடமாக உள்ளது.

அமேசன் காட்டின் ஒரு பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் பற்றிய காட்டுத்தீ, தொடர்ந்து சில தினங்களாக காடு முழுவதும் பரவி வருகிறது.

இதனால் பல்லாயிரக்கணக்காக ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள மரங்கள் மற்றும் பல்வேறு உயிரினங்கள் தீக்கிரையாகி வருகின்றன.

இந்தக் காட்டுத்தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில் இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கவலை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அவர், "எங்கள் வீடு எரிகின்றது உண்மையாக இந்த உலகத்தின் நுரையீரல் இது. எங்கள் சுவாசத்தின் 20 வீதம் இது. இது தீப்பிடித்து எரிகின்றது. இது சர்வதேசத்துக்குமான கவலை" எனக் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

## ரோல் 3 வாரங்களுக்கு நீடிப்பு



வருகின்றனர். அவர்களை விடுதலை செய்யக்கோரி தமிழக கட்சிகள் போராட்டங்கள் நடத்தி வருகின்றன. மேலும் பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன.

இதையடுத்து நீதிமன்றம் அந்த 7 பேரை விடுவிக்கும் உரிமையை மாநில அரசிடம் ஒப்படைத்தது. இதன் பின்னர் தமிழக அரசு ஆளுநருக்கு கடிதம் எழுதியது.

ஆனால் தமிழக ஆளுநர் இன்னும் முடிவெடுக்காததால், அவர்களை விடுதலை செய்வதில் தாமதமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ள்ள பிரிட்டன் கப்பல்



செய்தி நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் நிறுவனத்திற்கு சொந்தமான ஆனால் சுவீடன் நிறுவனத்தினால் இயக்கப்படும் ஸ்டெனா இம்பீரோ டேங்கர் கப்பலை அண்மையில் ஈரான் கைப்பற்றியது.

முன்னதாக, ஜிப்ரால்டரில் கடற்பகுதியில் வைத்து ஈரானிய டேங்கர் கப்பலை பிரித்தானியா கைப்பற்றியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் ஸ்டெனா இம்பீரோவை கைப்பற்றப்பட்டது.

எனினும், அண்மையில் ஈரான் டேங்கர் விடுவிக்கப்பட்டது. இதனையடுத்து, பிரித்தானியா டேங்கரை ஈரான் விடுவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வாறானதொரு சூழலிலேயே ஸ்டெனா இம்பீரோ டேங்கர் கப்பல் விரைவில் விடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகின. (ஜ-2)

## எல்லைக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு

# ஆஸி தூதரகம் முன் அகதிகள் போராட்டம்







(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவின் கடுமையான எல்லைக் கொள்கைகள் காரணமாக இந்தோனேசியாவில் தாங்கள் பல ஆண்டுகளாக தவித்து வருவதாக அவுஸ்திரேலியத் தூதரகம் முன் அகதிகள் போராட்டம் நடத்தினர். இதில் 600 இற்கும் மேற்பட்ட அகதிகள் பங்கேற்றனர்.

இலங்கை, ஆப்கானிஸ்தான், சோமாலியா, மியன்மார் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 14,000 அகதிகள் இந்தோனேசிய முகாம்களிலும் வீதிகளிலும் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் அவுஸ்திரேலியாவில் மீள்குடியேற காத்திருக்கக்கூடிய அகதிகள். ஆனால் கடுமையான எல்லைப் பாதுகாப்புக் கொள்கையின் அடிப்படையில் அகதிகள் விடயத்தில் கடுமையான நிலைப்பாட்டை அவுஸ்திரேலிய அரசு பின்பற்றி வருகிறது.

இந்தச் சூழலில், மனிதாபிமானமற்ற விதிகளை அவுஸ்திரேலிய அரசு திரும்பப் பெற வேண்டும் என அவுஸ்திரேலிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்த கடிதத்தில் அகதிகள் கோரினர்.

"நாங்கள் இந்தோனேசியாவில் எந்த அடிப்படை உரிமையுமின்றி இருக்கின்றோம். மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2013 முதல் கடுமையான எல்லைப்பாதுகாப்புக் கொள்கையினை நடைமுறைப்படுத்தி வரும் அவுஸ்திரேலிய அரசு, படகில் வர முயற்சிக்கும் அகதிகளை முழுமையாக நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# மக்கள் வங்கியை விற்கப்போவதாக எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதில் எந்தவித உண்மையுமில்லை

## அரச தரப்பு மறுப்பு



(கொழும்பு)

**மக்கள் வங்கியின் நற்பெயரைப் பாது காத்து மேலும் வலுப்படுத்தும் நோக்கிலே வங்கியின் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்கின்றோம். மாறாக மக்கள் வங்கியை விற்கப்போவதாக எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதில் எந்தவித உண்மையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் வங்கி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வங்கி நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் திட்டத்திலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஆனால் இந்த நடவடிக்கையை எதிர்க்கட்சி பிழையாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றது. இதனால் மக்கள் வங்கி ஊழியர்கள் நேற்று முன்தினம் மதிய போசன நேரத்தில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் வங்கி திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் பிழையான கருத்தை தெரிவித்து வங்கி ஊழியர்கள் மற்றும் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் கணக்காளர்கள் மத்தியில் வங்கி தொடர்பில் நம்பிக்கையை இல்லாமலாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன்மூலம் மக்கள் வங்கியின் நற்பெயருக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளும் அபாயம் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீனா வழங்கிய 'பராக்கிரமபாகு' கப்பல் கடற்படையில் இணைவு




(கொழும்பு)

இலங்கைக்கு சீனாவால் கொடையாக வழங்கப்பட்ட P 626 என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆணையிட்டு கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

எஸ்.எல்.என்.எஸ்.பராக்கிரம என்று பெயரிடப்பட்ட இந்தப் போர்க்கப்பலை ஆணையிட்டு இயக்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தில் இடம் பெற்றது,

இந்தப் போர்க்கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் நளீந்திர ஜெயசிங்க, ஜனாதிபதியிடமிருந்து போர்க் கப்பலுக்கான ஆணையைப் பெற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் பாதுகாப்புச் செயலர், கடற்படை, இராணுவ, விமானப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அதிகாரிகள், பிரதானி மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் செங்ஷியுவான் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

1994 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தப் போர்க்கப்பல், 112 மீற்றர் நீளமும் 12.4 மீற்றர் அகலமும் கொண்டது. 2300 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலில், 18 அதிகாரிகள் உள்ளிட்ட 110 மாலுமிகள் பணியாற்றுவதற்கான வசதிகள் உள்ளன.

இலங்கைக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இந்தப் போர்க்கப்பல், ஆழ்கடலில் தேடுதல், மீட்பு நடவடிக்கைகள் மற்றும் கடல் எல்லைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

திருகோணமலையிலுள்ள கிழக்குக் கடற்படைத் தலைமையகத்தின் கீழ் இந்தப் போர்க்கப்பல் இயங்கவுள்ளது.

சீனாவின் ஷங்காய் துறைமுகத்தில் கடந்த ஜூன் மாதம் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் போர்க் கப்பல், ஜூலை மாதம் கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அட்மிரல் ரவீந்திரவுக்கு சேவை நீடிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு, சேவை நீடிப்பு வழங்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தர விட்டார்.



கடந்த 2017 ஆம் ஆண்டு பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்ட அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, 2019 ஒகஸ்ட் 22 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவிருந்தார்.

இந்நிலையில், அவருக்கு 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சேவை நீடிப்பு அளிக்கும் உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வழங்கினார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக 2017 இல் பொறுப்பேற்க முன்பு, 2015 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் திகதியிலிருந்து கடற்படைத் தளபதியாக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பணியாற்றினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அன்னரச அமிர்த சஞ்சீவி

'அன்னரச அமிர்த சஞ்சீவி' என்றால் என்னென்று தெரியுமா உங்களுக்கு? நானும் கொஞ்ச நாளைக்கு முன்னர் தான் அப்படியென்றால் என்ன என்று புரிந்து கொண்டேன்.

கிராமத்திலே ஒரு பழைய காலத்து வீடு. அந்த வீட்டிலே இருந்த அலுமாரியை சுத்தம் செய்த போது பழைய புத்தகம் ஒன்று கிடைத்தது. அதை ஒரு பெரியவர் எடுத்து என்னிடம் கொடுத்தார்.

வாங்கிப் பார்த்தேன். தலையணை மாதிரி இருந்தது. அவ்வளவு பெரிய புத்தகம். 904 பக்கம். விலை எவ்வளவு என்று பார்த்தேன். 3 ரூபா என்று போட்டிருந்தது. 68 வருடத்திற்கு முன்னர் வெளியான புத்தகம். 20.05.1925 அன்று எட்டாம் பதிப்பு, 4000 பிரதிகள் போட்டிருக்கிறார்கள். புத்தகத் தலைப்பு என்ன தெரியுமா? "ஜீவப்பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" அதிலே முதல் பக்கத்திலே என்ன எழுதியிருந்தது தெரிமா?

"இது வெட்டவெளி பரம்பரையில் வந்த ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகளின் பிரிய சிஷ்யராகிய கடப்பை ஸ்ரீ பரமஹம்ச சச்சிதானந்த யோகீஸ்வரரால் இயற்றிச் சென்னை சூளை 'ஸ்ரீபாரதி' அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்று போடப்பட்டிருந்தது.

அந்தப் புத்தகத்தை புரட்டினதுக்கு பின்புதான் 'அன்னரச அமிர்த சஞ்சீவி' என்றால் என்ன என்று புரிந்துகொள்ள முடிந்தது. அது வந்து வேறு ஒன்றுமில்லை.

'அன்னரசம்' என்றால் என்ன? அன்னம் என்றால் சோறு. ரசம் என்றால் சாறு. அன்னரசம் என்றால் நீராகாரம். அதுதான் அன்னரச அமிர்த சஞ்சீவி. அந்த அளவுக்கு அதிலே விடயம் இருக்கா என்று நீங்கள் கேட்கலாம். இருக்கு! அதுதான் இன்றைக்குத் தகவல். "பழைய சாதமும் அதன் நீரும் சாப்பிட்டு வந்தால் அவர்களுக்கு மலச்சிக்கலில்லாமலும் சரீரத்திற்கு எவ்வித வியாதிகளும் வராமல் எப்பொழுதும் சுகமாயிருப்பார்கள்" என்று அந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கு.


பழைய சாதம் எப்படி தயார் செய்வது என்ற விபரமும் அதிலே இருக்கு. "இது என்ன பெரிய விடயம்! இரவு மீதமாகவுள்ள சோற்றிலே தண்ணியை ஊத்தி வைத்தால் மறுநாள் காலையிலே அதுதான் பழைய சோறு" இதிலே சில நுணுக்கமெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். குக்கரிலே சாதம் தயார் செய்கிற காலம் இது. அந்தக் காலத்திலே அப்படியில்லை. இரவிலே சாதம் வடித்து பின்பு ஒரு பாத்திரத்திலே சுத்தமான தண்ணியை விட்டு கொதிக்க வைக்க வேண்டும். சாதம் வடித்த கஞ்சியிலே படிந்திருக்கிற ஏட்டை எடுத்துவிட்டு அந்தக் கஞ்சியை குடும்பத்துக்கு வேணுமானளவு எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு பங்கு இந்தக் கஞ்சி நீர், ஒரு பங்கு கொதித்து ஆறின தண்ணீர். இவை இரண்டையும் ஒரு பாத்திரத்திலே கலந்து வைக்க வேண்டும். இரவு எல்லோரும் சாப்பிட்டதற்குப் பிறகு மிகுதியாயிருக்கிற சாதத்திலே இதை ஊற்றி மூடி வைக்க வேண்டும்.

காலையிலே ஒரு பாத்திரத்திலே சாதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு மேலே கொஞ்சம் தண்ணியையும் ஊற்றிக் கொள்ளுங்கள். கொஞ்சம் அதிகமாக கரிக்கிற மாதிரி உப்புப் போட்டுக்கொள்ளுங்கள். ஊறுகாய் ஏதாவது பக்கத்திலே வைத்துக்கொள்ளுங்கள். சோற்றை சாப்பிட்டிட்டு அந்தத் தண்ணியையும் குடித்து விடுங்கள். மழைகாலம்–குளிர்காலம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆயுள் முழுவதும் இதைச் சாப்பிட்டுக் கொண்டே வரலாம்.

இப்படிச் சாப்பிட்டுக்கொண்டு வந்த எந்தக் காலத்திலேயும் எந்த வியாதியும் நம்மிடம் வராது என்று உத்தரவாதம் கொடுக்கிறார் அந்த மகான். சிறுவர்களிலேயிருந்து பெரியவர்கள் வரைக்கும் எல்லாரும் இப்படி சாப்பிடலாம். முதலிலே ஒரு ஆறு மாதம் இப்படிச் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலே அதனுடைய பலன் என்ன என்பதை நீங்கள் உணர ஆரம்பித்து விடுவீர்கள். இன்னொரு வைத்தியம் உண்டு. குடல் சுத்தமாக வேண்டுமா? நீவறு ஒன்றும் வேண்டாமென்று சொன்னாலும் நீராகாரத்தை ஒரு டம்ளர் எடுத்துக்க வேண்டியது. கொஞ்சம் அதிகமா கரிக்கிற மாதிரி உப்பை போட்டுக்கொள்ள வேண்டியது. ரொம்ப அதிகமா திகட்டுகிற அளவுக்குப் போட்டு விடக்கூடாது. காலையிலே வெறும் வயிற்றிலே சாப்பிட வேண்டியது. உடனே தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டியது. அவ்வளவுதான் வயிறு கிளீன்.

அந்த பழைய சாதத்திலே தயிர்–மோர் விட்டு சாப்பிடக்கூடாதாம். திமிர்–சோம்பேறித்தனம்–கொட்டாவி–தூக்கம்–மந்த புத்தி எல்லாம் வந்திடுமாம். அது என்னத்துக்கு நமக்கு வம்பு? ஏற்கனவே இருக்கிறது போதாதா? இப்ப இதுவரைக்கும் சொல்லியிருக்கிற விபரமெல்லாம் ஒரு மகான் அனுபவத்திலே சோதித்துப் பார்த்துவிட்டு நமக்குச் சொல்லியிருக்கிற விடயங்கள்.

இது "கைகண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஔடதமென்று அறியக் கடவீர்களாக" என்று அவர் எழுதியிருக்கிறார். அதை இப்ப உங்கள் காதிலேயும் போட்டு வைத்து விட்டேன். உங்கள் வீட்டிலே இருக்கிற மற்றவர்கள் காதிலேயும் இது விழுந்திருக்கலாம் . பாவம் சேர் நீங்கள். நாளைக்குக் காலையிலேயிருந்து உங்கள் வீட்டு "காலை ஆகாரம்' வித்தியாசமாக இருந்தால் அதுக்காக என்னை தேடிக் கொண்டு வராதீர்கள் சண்டை போடுவதற்காக. இதிலே மறைமுகமாக நான் உங்களுக்கு ஒரு சௌகரியமும் செய்திருக்கிறேன். அதையும் நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். உங்கள் வீட்டிலே இதுதான் காலை டிபன் என்று தெரிந்தால் அதன் பின்பு உங்கள் வீட்டுக்கு விருந்தாளிகள் யாரும் வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும் வருகிற வழியிலே இருக்கிற ஹோட்டலில் ஒரு வாய் சாப்பிட்டு விட்டு வந்திடுவார்கள். இதை நினைத்தாவது நீங்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்.



# பொன்னான வேல் வடிவாய் முருகன் நிற்பான்!

-கம்பவாரிதி இ.ஜெயராஜ்-

உளம் மகிழ நல்லூரான் கொடியும் ஏற
உற்சவத்தின் பெருமைதனை எண்ணி எண்ணி
நிலமகளும் வானவரும் மகிழ்ந்து நிற்பர்
நேசமுடை நெஞ்சரெலாம் தொழுது நிற்பர்
தளமதனின் அமைப்பெல்லாம் மாறிப் போக
தனித்தேதான் நல்லூரும் எழுந்து நிற்கும்
வலம்வரு நல் அடியரெலாம் உருகி நெஞ்சம்
வந்ததுவாம் வசந்தம் என வணங்கி நிற்பர்.

புத்தாடை, புதுச்சட்டி, புதிய வாழ்வு
பொன்னாக மலர்ந்திடவே அடியரெல்லாம்
இத்தோடு நம் வினைகள் தீர்ந்து போகும்
என எண்ணிக் கந்தனது அடியைச் சார்வார்.
வித்தாக வந்தமரர் துயர்கள் தீர்த்த
வேலவனின் தாள்பணிந்து விரதம் காத்து
முத்தாக அவன் நாமம் சொல்லிச் சொல்லி
மூழ்கித்தான் போயிடுவர் முருகன் தாளில்

கோபுரத்துக் கொடியதனில் சேவல் நின்று
கொக்கரக்கோ எனக் கூவி முருகன் தன்னை
தாபமுடன் சிறகடித்து அழைத்து நிற்கும்
தன் ஒலியால் கந்தனது நினைவை ஊட்டி
நாபுரத்தும் மணிகளெலாம் அசைந்து ஆடி
நம்முருகன் அருகிருக்கப் பயம் ஏன் என்னும்
பாபமெலாம் தீர்க்கின்ற கந்தன் வேலும்
பக்திமையால் தொழுவோர்க்கு அபயம் நல்கும்

ஓங்குகிற வடிவேலும் ஒளிர்ந்து நிற்கும்
ஒப்பற்ற தேவியரும் சார்ந்து நிற்பர்
பாங்குடனே மயில் மீது பரமன் தானும்
பலர் வியக்க அலங்காரப் "பவிசு" கொள்வான்
வீங்குகிற தோள் சிறக்க விரும்பி நல்ல
வீறுடனே அவன் பாரம் தன்னை ஏற்று
தாங்குகிற அடியார்கள் கண்கள் சோர
தவம் இதென எண்ணித்தான் தளத்தில் நிற்பார்.

மாதிருவர் தனையேற்று மகிழ்ந்து நல்ல
மாண்பான குழலிசையில் மயங்கும் கந்தன்
போதுகளால் விதம்விதமாய் புனிதம் சேர
பொன்னான வடிவெடுத்து மனதை ஈர்ப்பான்.
ஏதிவனின் அழகென்று இமைகள் சோரா
இருந்தேதான் அடியவரும் உருகி நிற்க
நாதவடிவான மயில் நல்லைதன்னில்
நர்த்தனங்கள் செய்வதனை என்ன சொல்ல?

ஒய்யாரத் தேவியளாம் வள்ளிதானும்
ஒருபக்கம் அமர்ந்தேதான் அருளைச் செய்வாள்
எய்யாத வேல் நிகர்த்த விழிகள் கொண்ட
ஏந்திழையாள் தெய்வானை இனிமை சேர்ப்பாள்
பொய்யாத அடியவரின் குறைகள் கேட்டுப்
பொன்னான வேல் வடிவாய் முருகன் நின்று
மெய்யான அருள் சுரக்க மிளிர்ந்து நல்ல
மேதினியில் வாழ்வுயரும் மேன்மை சேரும்.

மண்ணதனைப் பொன்னெனவே மாந்தி மாந்தி
மாறாத பக்தியொடு இளைஞர் கூட்டம்
எண்ணரிய பேறென்று எண்ணித் தம்மின்
ஏற்றமுறும் உடல் உருட்டி இனிமை கொள்வார்
விண் அதிர அடியரெலாம் முருக நாமம்
வீறுடனே ஒலிபரப்ப விளங்கித் தேரும்
கண்ணெதிரே வருங்காட்சி காண்பார்க்கெல்லாம்
கதி கொடுத்து கந்தனது அடிகள் சேர்க்கும்.

மாம்பழத்துப் போட்டியிலே மயிலிலேறி
மாண்பாக முருகனவன் வீதி சுற்ற
தாம் வளர்த்த அறிவதனால் வழியைக் கண்டு
தாய் தந்தை தனைச்சுற்றி கணேசன் தானும்
வீம்புடனே பழம் பெற்று விளங்கி நிற்க
வீறான முருகனவன் கோபம் கொண்டு
வேம்பெனவே கசக்கு மனம் விரக்தி கொள்ள
வேல் விடுத்து தண்டெடுத்து விளங்கி நிற்பான்.

ஆங்கதனைக் காணுகிற அடியரெல்லாம்
ஐயனது ஆண்டியதாம் கோலம் கண்டு
பாங்குடனே எம்முடைய நல்லூர் தன்னில்
பழனியிலே வீற்றிருக்கும் முருகன் வந்தான்
நாங்களெலாம் முன்செய்த் பயனால் அன்றோ
நல்லூரான்தனின் இந்தக் கோலம் கண்டோம்
வீங்குகிற மனம் செழிக்க விம்மி விம்மி
விளம்பித்தான் உருகிடுவார் வினைகள் தீர்ப்பார்.

அப்புறமும் இப்புறமும் அசையமாட்டா
அடியரெலாம் அகப்பட்டு திணறி நிற்பார்
முப்புரமும் எரித்த சிவன் போல அங்கி
மூண்டெழவே ஒளிபெருக்கி கந்தன் ஊரும்
சப்பறத்தின் அழகதனை என்ன சொல்ல?
சார்ந்தவர்கள் அதிசயிக்க விண்ணைத் தொட்டு
எப்படித்தான் இதை அமைத்து ஏற்றம் செய்தார்?
என வியக்கக் கந்தனுமே எழுந்து நிற்பான்.

வேலழகா? முருகனது விளங்கும் நல்ல
விழி அழகா? அருகிருக்கும் தேவிமாரின்
தாள் அழகா? இவர் தமையே தாங்கி நிற்கும்
தனித்த பெரும் மயில் அழகா? தாவிப்பாயும்
மா அழகா? எந்நாளும் மனதை ஈர்க்கும்
மாண்புடைய கோபுரத்தின் நிமிர்வழகா?
தேர் அழகா? திகழுகிற கந்தன் தன்னின்
திரு அழகா? தேறாது சிந்தை மாயும்.

ஆர்த்தெழுந்து வருகின்ற இளைஞர் கூட்டம்
அன்புடனே கந்தனவன் நாமம் சொல்லி
பேர்த்தெழுந்து புவி பிளந்து வந்தாற்போல
பெரும்படையாய் கேணியதுள் பாயும் காட்சி
பார்த்தவர்கள் நெஞ்சுருக்கும் பக்திதானும்
பாரதனில் குறைந்ததென கூறிநிற்போர்
தீர்த்தமதை நல்லூரில் கண்டால் தங்கள்
தீர்மானம் மாற்றிடுவர் திருத்தம் கொள்வர்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

# கந்தபுராண எழுச்சி விழாவில் "தாரகன் வதை", "கதம்ப இசை"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள் நெறி விழா - 2019" நிகழ்வின் 19 ஆம் நாள் வைபவம் இன்று மாலை 6 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் பிரதம விருந்தினராகக் கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர், வீ.கருணலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம், கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறும்.

சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை மற்றும் மூளாய், ஞானஒளி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தனின் "தாரகன் வதை" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும். சிறப்புச் சொற்பொழிவின் போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும். உற்சவ காலப் 19 ஆம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக, திருமதி. உமா வைகுந்தன் மற்றும் குழுவினர் வழங்கும் "கதம்ப இசை" நிகழ்வும் இடம் பெறும். (இ-7)

# பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், நிகழ்வுகள் வரிசையில், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் இன்று 19 ஆம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நாவலடி வைரவர் ஆலயக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வு இடம்பெறும். (இ-7)




## நல்லையின் நாயகனே!

நல்லையின் நாயகனே
நல்லை முத்துக் குமரனே
தந்தைக்கே உபதேசித்த தண்டாயுதபாணியே
தரணி எங்கும் ஆளும் மைந்தனே
உன் பொற் திருவடிகள் காணவோ?
உலகெங்குமுள்ள பக்தர்களின் கூட்டம்
அருளினைத் தந்திடு ஆறுமுகா
அனைவர் நெஞ்சிலும் வந்திடு வேலவா

*லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்*
*மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி*

## குறை தீர்க்க வாருமையா

அழகு தவள் ஆறுமுகம் அருளை வார்க்க
அதிலிருக்கும் திருமுடிகள் இருளை நீக்க
பழகு தமிழ் பாவலர்கள் பதிகம் பாட
பக்தர் குழாம் சூழ்ந்து நின்று நடனமாட
இளமைதவழ் அருள்முருகன் எழிலாய் அந்த
இணையற்ற தேவியர் மார் இருவர் சூழ
குழகனது குமரனாய் மயில் மீதேறி
குறை தீர்க்க வீதி வலம் வாருமையா

*நயினையம்பதி*
*திலகவதி ஆறுமுகம்*

## வேலவனே சரணம் சரணம்

வெற்றி புனையும் வேலே போற்றி
வேதாந்தப் பொருளை உலகிற்கு உரைத்தோனே
மயில் மீதேறியே வலம் வந்தோனே
மக்கள் நலம் பெறவே வருகவே

கந்தனே நல்லையம்பதி வாழ்பவனே சரணம்
கடம்பனே முத்துக்குமர சாமியே சரணம்
தேவசேனாபதியே நல்லூரானே உன்னடி சரணம்
தேவாதி தேவனே சரணம் சரணம்

*ஜெயந்தி*
*அரியாலை*

## பரவசம் நிறையுதடா சரவணபவ

நறுமணம் வீசும் புது மலரெடுத்து
நல்மனதை ஒருங்கிருத்தி
நல்லூரான் நாமமதை ஜெபித்து
பக்தியுடன் மலர்மாலை தொடுத்து
கருணைக் கந்தனுக்கு சூட்டி கை தொழுதால்
கவலைகள் பறந்து பரவசம் நிறையுதடா சரவணபவ

*செல்வநிதி சரவணபவன்*
*பினவத்தை*

## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

அன்பா ஞன துடியே தொழும்
அடியார் களை யென்றும்
துன்பத் தினில் துவளா, வெழுந்
துயர் போக்கிடும் தூயன்
கன்ம வினை களையு, மூடன்
களையும் கன மாயன்
நன்மை பொழி யின்மை யொழி
நல்லைக் கும ரோனே!

*கலாபூஷணம்,*
*சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்*

# பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணத்து வலிகாமம் மேற்குப் பகுதியில் பொன்னாலை என்னும் அழகிய கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி தம்மை நாடி, ஓடிவரும் பக்தர்கட்கு நல்வரங்களை எல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு 2019 ஆம் ஆண்டு விகாரி வருஷ ஆண்டு மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா தமிழ் ஆவணி 7 ஆம் திகதி (24.08.2019) சனிக்கிழமை இன்று நண்பகல் 12 மணியளவில் மிகவும் பக்திபூர்வமாகவும், அமைதியாகவும் அடியார்கள் புடைசூழ நடைபெறுகிறது.

திருவருட் பெருமையும் வரலாற்றுப் பழைமையும் வாய்ந்த திருமால் ஆலயங்களில் ஒன்றாக இவ்வாலயம் திகழ்கிறது. சைவ ஆலயங்களின் தோற்றம், பெருமை என்பன கூறப்பட்ட தட்சண கைலாய புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம், மகிமை என்பன கூறப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 5 மணிக்கு 108 கலசபூஜை நடைபெற்று அதனையடுத்து தம்பபூஜை இடம்பெற்று முற்பகல் 10 மணியளவில் வசந்தமண்டப பூஜையுடன் வரதராஜப் பெருமாள் ஸ்ரீ தேவி, பூதேவியார் சகிதம் விசேட மேளவாத்தியங்கள் முழங்க உள்வீதி வலம் வந்து நண்பகல் 12 மணியளவில் தங்கத் தேரேறி பக்தர்கட்கு அருளாட்சி வழங்குகிறார். பிற்பகல் 1.30 மணியளவில் உறியடி உற்சவம் இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் பச்சை சாத்துதல் இடம்பெற்று தேரிலிருந்து இறக்கப்பட்டு தன் இருப்பிடத்தை அடைவார். இரவு 7.30 மணியளவில் தேரடி பார்த்தல், சேந்தை சேவை இடம்பெற்று நள்ளிரவு 12 மணியளவில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தாலாட்டு மற்றும் பஜனைகள் இடம்பெறும்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலின் ஆவணி மாதத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு 19 நாட்களும் மார்கழியில் ஏகாதசியை முன்னிட்டு 10 நாட்களுமாக இரண்டு மஹோற்சவ விழாக்கள் வருடம் தோறும் இடம்பெறுகின்றன. தட்சண கைலாய புராணத்திலே பொன்னாலை பெருமை உரைத்த படலம் என்னும் அத்தியாயத்தில் இவ்வாலயத்தின் தோற்றமும், பெருமையும் கூறப்பட்டிருக்கிறது.

தற்பொழுது 108 அடி உயரமான இராஜகோபுரத்துடனும் புதிதாக அமைக்கப்பட்ட மணிமண்டபத்துடனும் ஆலயம் மிகவும் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. "பறாளை விநாயகர் பள்ளு" எனும் நூலில் இத்தலத்தின் பெருமை மிகச் சிறப்பாகக் கூறப்படுகிறது.

தசாவதாரங்களுள் இரண்டாவதாகக் காணப்படும் கூர்ம அவதார சேத்திரமாக விளங்கும் பொன்னாலைப் பதியினிலே ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் இன்றைய தெய்வீக மணம் கமழும் பொன் நாளில் தங்கத் தேரேறி தன்னை நாடி வரும் பக்தர்கட்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருக் காட்சியைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா! பக்தர்களின் "அரோகரா" ஒலிவானைப்பிளக்கிறது.





அந்தணர்களின்வேதபாராயண ஒலி மறுபுறம், எங்கு பார்த்தாலும் ஒரே ஜனசமுத்திரம், பஜனைக் கோஸ்ரிகள் ஒருபுறம், பக்தர்கள் ஆடியும், பாடியும் வரதராஜப் பெருமாளை வந்தனை செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஆண்கள் அங்கப் பிரதிஸ்டை செய்தும் காவடி, தூக்குக் காவடி எடுத்தும் மாதர்கள் அடி அழித்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும் தங்கள் நேர்த்திக் கடன்களை செய்கிறார்கள்.

ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு பக்தர்கட்கு தாகசாந்தி வழங்கப்படுகிறது. ஆலய மடாலயங்களில் மிகச் சிறப்பான முறையில் உற்சவ காலங்களில் அன்னதானம் வழங்கப்படுகிறது.


26.08.2019 ஆம் திகதி முற்பகல் 9 மணியளவில் 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 5 மணியளவில் மாப்பிள்ளை அழைப்பு இடம்பெற்று இரவு 9 மணியளவில் திருமாங்கல்ய தாரணத்துடன் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியார் சகிதம் அழகிய மலர்மாலைகளால் சூடப்பட்ட பூந்தண்டிகையில் மின்ஒளி வீச, திருவீதி வலம் வரும் கோலாகலமான காட்சியும் இடம்பெற உள்ளது.

எனவே இன்றைய தெய்வீக மணம் கமழும் தேர்த்திரு நாளிலே நாட்டிலே சாந்தி, சமாதானம் நிலவ அருள்பாலித்து இந்த மண்ணிலே பிறந்த அனைவரும் இன்புற்று வாழ்ந்து தேடுதற்கரிய மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜப் பெருமான் திருவருள் பாலிப்பாராக!

"கலைஞாயிறு" கந்தையா-கனகசபை.

# கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்

## இன்று கிருஷ்ண ஜெயந்தி நன்னாள்



ஆதி அந்தம் இல்லாத இந்து மதம் தனிலே கடவுள் வழிபாட்டில் மும்மூர்த்திகள் எனப்படும் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூவரும் சிறப்பும் உயர்வும் பெறுவதை நாம் அறிவோம். மும்மூர்த்திகளில் காத்தல் தொழில் புரிகின்ற கடவுள் விஷ்ணு பகவான். அத்தகு விஷ்ணு பகவான் அதர்மத்தை அழித்து தர்மத்தை புவி தனிலே நிலை பெறச் செய்வதற்காக யுகந்தோறும் தன் நிலை விட்டு அவதாரம் செய்து கீழ் இறங்கி வருகின்றார். அவ்வாறு விஷ்ணு பகவான் கொண்ட அவதாரங்கள் பல. அவ் அவதாரங்களில் தனிச் சிறப்புடைய அவதாரம் கிருஷ்ண அவதாரம் என்றால் மிகையில்லை.

பகவான் விஷ்ணு கிருஷ்ணராக ஆவணி மாதம் அட்டமித் திதியில் ரோகினி நட்சத்திரத்தில் சிறைச்சாலையிலே வசுதேவர் மற்றுஞ் தேவகி ஆகியோருக்கு மகனாக அவதாரம் செய்தருளினார். இவ்வாறு கிருஷ்ணர் பிறந்த அந்த நாளையே நாம் கிருஷ்ண ஜெயந்தி எனவும் கிருஷ்ண ஜென்மாஷ்டமி, கோலாஷ்டமி எனவாறும் அழைக்கப்படுகின்றது.

இதனை இந்தியாவில் மிகப் பெரும் பண்டிகையாக கொண்டாடி வரும் மரபு இன்றும் தொடர்கின்றது. ஆனாலும் நம் நாட்டில் அந்த மரபு உயர்வு பெறவில்லை என்பதும் கண்கூடு.

கிருஷ்ணர் தேவகியின் வயிற்றில் பிறந்தாலும் வளர்ந்தது என்னமோ யசோதையின் அரவணைப்பிலேயே ஆகும். ஆயர்பாடி கோகுலத்தில் வளர்ந்து வந்தவன் கண்ணன். அங்கு வாழும் காலத்தில் பல குறும்புகளை புரிந்து எல்லோர்மனதையும்கொள்ளை கொண்டான். அதனால் தான் இன்றும் குழந்தைக் கண்ணன் என்றால் எல்லோர்க்கும் கொள்ளைப் பிரியம்.

குறும்புகள் மட்டுமல்ல லீலைகள் பலதையும் புரிந்தவன் அந்த மாயக்கண்ணன். சிறு வயதிலேயே வெண்ணெய் திருடி உண்பதில் விருப்பமுடையவன் கண்ணன் தன் வீட்டில் வெண்ணெய் இருந்தாலும் பக்கத்து வீடுகளில் உள்ள வெண்ணெயை திருடி உண்பதில் வித்தை காட்டுபவன் இந்தக் கண்ணன். பசுக்களை மேய்த்துச் செல்வதிலும் கோபலர்களுடன் விளையாடுவதிலும் ஆர்வம் உடையவன் அந்த மாதவன். ஒருமுறை கண்ணன் புரிகின்ற குறும்புகளைப் பொறுக்க முடியாத ஆட்சியர்கள் எல்லோரும் யசோதையிடம் முறையிடுகின்றனர்.

இதனால் தாய் யசோதை கண்ணனை கயிற்றினைக் கொண்டு உரலில் கட்டிப் போட்டாள். உலகை அளந்தவனாகிய நாராயணனே தாய் யசோதையின் அன்பிற்குள் கட்டுப்படுகின்றான். இவ்வாறு கிருஷ்ணர் ஆயர்பாடியில் வளர்ந்து வருகின்றான்.

கிருஷ்ணர் நடுநிசியில் அதாவது நடுச்சாமத்தில் பிறந்தமையால் இந்த கிருஷ்ண ஜெயந்தி நள்ளிரவுப் பொழுதிலேயே ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படுகின்றது. வீடுகளை நன்றாக கழுவி மஞ்சள் நீர் தெளித்து, நிறைகுடம் வைத்து மாவிலை, தோரணம் கட்டி, கோலம் போட்டு வழிபாட்டிடத்தை ஒழுங்கு செய்ய வேண்டும்.

கண்ணனது சிலைக்கோ அல்லது படத்திற்கோ வழிபாடுகள் இயற்றுவது அவசியமாகும். ஆம் கண்ணன் சிறு குழந்தையாக எல்லோர் வீடுகளுக்கும் வருகின்றான் எனும் நம்பிக்கையினால் வீட்டின் வாசலில் இருந்து சுவாமி அறை வரைக்கும் சிறு குழந்தைகளின் கால் தடங்களை இடச் செய்வது வழக்கமாகும்.

அதுபோல குழந்தைகளை கண்ணனாக அலங்காரம் செய்து அவ்வாறு நடக்கச் செய்வதும் இடம்பெறும் சிறப்பம்சமாகும்.

மேலும்கிருஷ்ணருக்கு இனிப்புப் பலகாரங்கள் என்றால் கொள்ளைப் பிரியம். லட்டு, கேசரி, முறுக்கு, வெண்ணெய், தயிர், சீடை, அவல் இவை கண்ணன் விரும்பும் உணவுகளாகும். இதனால் கிருஷ்ண ஜெயந்தியாகிய இன்றைய நாளில் இந்த பலகாரங்கள் எல்லாம் கண்ணனுக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன.

இவ்வாறு இத்தகு கிருஷ்ண ஜெயந்தியில் விரதமிருந்து அல்லது இந்த நாளை விழாவாக கொண்டாடி கண்ணனை மனமார வேண்டினால் பல நன்மைகள் வந்து சேரும் என்கின்றன புராணக் கதைகள்.

ஆம் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு கண்ணன் அருளால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும், திருமணத் தடைகள் நீங்கும், மேலும் இல்லங்களில் மகிழ்ச்சி பெருகிடும், குழந்தைகள் அறிவும் ஆரோக்கியமும் பெறுவார்கள். இதுதவிர சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெறும்.

இன்றைய நாளில் கிருஷ்ணரின் பெருமை கூறும் கதையாடல்கள், கிருஷ்ண கவசம், கிருஷ்ண நாமங்கள் என்பவற்றை உரைத்தும் அல்லது கேட்டும் வருவது நன்மை பயக்கும். ஆகவே நாமும் கண்ணன் பிறந்த இந்நாளில் அவனை பக்தியோடு வழிபட்டு அவனருள் பெறுவோம்.

இராஜேஸ்வரன் நிஷாந்தன்
இராமநாதபுரம்

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—181

# நீங்களும் தொழில்முனைவோராகலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வருங்காலம் எமதாகின்றது என்பதனை நம்புங்கள்! ஒவ்வொருவரும் தொழில்முனைவோராவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது. இதற்கு எங்களை நாம் முழுமையாக தயாராக்கிக் கொள்ள வேண்டும். எது சாத்தியம் எது சாத்தியமில்லை என்பதற்கான வாக்குவாதங்களை ஒரு புறம் தள்ளிவைத்து விட்டு நாம் எடுத்துக்கொண்ட முயற்சியில் முழுமையாக ஈடுபட்டால் எதனையும் எம்மால் சாதிக்க முடியும் என்னும் நம்பிக்கை பிறந்து விடும். முதலில் எமக்கு முழுமையாக உந்துதல் தேவைப்படுகின்றது. அது முதலாவது வெற்றியாக இருந்துவிட்டால் அதில் மீளவும் ஆழமாக இறங்குவதற்கு துணிவு வந்து விடும்.

முதல் வெற்றி முன்னோக்கிய வெற்றி என்பதனை புரிந்து கொள்ளுங்கள். இதற்கு பக்க பலமாக உங்களுக்கு நம்பிக்கையானவர்களை, திறமையானவர்களை இன்னும் உங்களோடு பக்க பலமாக இருப்பவர்களை சேர்த்துக்கொள்ளுங்கள். அது தாயாக, தந்தையாக, குருவாக, மனைவியாக, உறவினராக, நண்பர்களாக எவராகவும் இருக்கலாம். உங்களது வெற்றிப்பயணத்தில் உறுதுணையாக உங்களுடன் தொடர்ந்து பயணிப்பவர்களை இனங்காணுங்கள். இவர்களது இணைப்பு அந்த தொழில் முயற்சிக்கான நேரடிப்பங்களிப்பாக இல்லாவிட்டாலும் நீங்கள் வீழும் நேரங்களில் தாங்கிப்பிடித்து உங்களுக்கு ஆலோசனையும் உற்சாகத்தையும் தருபவர்களாக இருந்தாலே போதும்.

உங்களை முழுமையாக நம்புங்கள். உங்களால் முடியும் என திடசங்கற்பம் கொள்ளுங்கள். உங்களைத்தவிர எவருக்கும் உங்களைப்பற்றிய முழுமையான தெளிவு இருக்காது. உங்களது பலவீனங்களை மற்றையவர்களிடம் பகிர்ந்து கொள்ளாதீர்கள். அது உங்களுக்குள்ளேயே இருக்க வேண்டும். பலவீனத்தை பலமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் கரிசனை செலுத்துங்கள். பலவீனம் என்னும் சொல்லுக்குள் பலம் ஒளிந்திருப்பதனை அவதானியுங்கள். செம்மொழியாம் தமிழ் மொழியின் ஆளுமையைக் கவனித்தீர்களா? எமது பலம்,பலவீனம் என்பனவற்றை நாமே கணக்கிட்டுக் கொண்டால் இன்னும் வரிசைப்படுத்திக் கொண்டால் இருக்கின்ற பலத்தை அப்படியே தக்க வைக்கும் அதே நேரத்தில் பலவீனங்களை மெல்ல மெல்ல பலமாக் மாற்றுவதற்கான வழிவகைகளை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 194




கண்டறியுங்கள். உங்களால் இயலுமான வழிகளாக அவை இருந்துவிட்டால் பின்னர் நீங்கள் வெற்றிப்பாதையில் ஏறி நடந்து செல்வதனை உணருவீர்கள்.

பேராசிரியர் ஓமர் என்பவரது கருத்துப்படி தொழில் ஒன்றை முனைவதற்கு முதலில் அதிகளவிலான முதலோ (Capital), அதீத அறிவோ (Intelligence) இன்னும் பாரிய வர்த்தகத் திட்டமோ (Business Plan) தேவையில்லை. ஆரம்பத்தில் எந்தத் தொழிலை செய்ய விரும்புகின்றோமோ அதில் முழுமையான ஈடுபாடு காட்ட வேண்டும். மெல்ல மெல்ல அந்தத் தொழில் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும். எது சரி, எது பிழை என்பதனை நீங்களாகவே கணக்கிட்டுக் கொள்ளலாம். கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு சிறிய அளவில்அந்தத்தொழிலை ஆரம்பிக்கலாம்.

தேடுதல் என்பது இப்போது மிகவும் அவசியமானதாக இருக்கும். தொழில் பற்றிய அனைத்தையும் அலசிப்பாருங்கள். எங்கே சரியாக நடக்கின்றது, எங்கே பிழைத்திருக்கின்றது என்பதனை தினமும் அலசி ஆராயுங்கள். உங்கள் தொழிலுக்கான சரிவு, இன்னும் தடைகள் எங்கே எங்கே இருக்கலாம் என்பதனையும் ஆராயுங்கள். ஆரம்பிக்கும் போது நாம் எண்ணியதெல்லாம் நடக்கும் என கனவு காணக்கூடாது. நாம் நினைப்பது வேறு, நனவாக நடப்பது வேறு. இரண்டும் ஒன்றாகிவிட்டால் அனைத்தும் நல்லதாகவே அமைந்துவிடும். ஆனால் பொதுவாக மாறித்தான் நடக்கும். ஆனால் அதனை எதிர்கொள்ளும் மனத் தைரியம் எமக்குள் வளர வேண்டும். மெல்ல மெல்ல ஆரம்பித்த தொழிலை கிடைக்கின்ற அனுபவத்தையும் உற்சாகத்தையும் வைத்துக் கொண்டு விரிவுபடுத்தத் தொடங்கலாம். இது வெற்றியின் முதல்படி.

தொழிலை விரிவுபடுத்தத் தொடங்கும் போது சந்தையை அவதானியுங்கள். உங்களது தொழிலிலிருந்து உருவாக்கப்படும் பொருளை எங்கே, யாருக்கு சந்தைப்படுத்தப் போகின்றீர்கள் என இனங்காணுங்கள். இதற்காக ஒரு ஆய்வினைக்கூட நீங்கள் மேற்கொள்ளலாம். ஆராய்ச்சி செய்து பார்த்தால் எங்கே எப்படி எந்தமாதிரி உங்களது பொருட்களைச் சந்தைப்படுத்தப் போகின்றீர்கள் என தெரியவரும். தரமான பொருளாக, சந்தையில் இல்லாத பொருளாக உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

விவசாயம் சார்ந்த உள்ளீடுகளை உள்வாங்கிய உற்பத்தியாக இருந்தால் அதற்கு மவுசு அதிகம். அதிலும் உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை புதிய பொருட்களாக, மக்கள் விரும்பி வாங்கும் பொருட்களாக உற்பத்தி செய்யும் தொழிற்றுறைகளை உருவாக்கலாம். சேதன பொருட்களிலிருந்து உருவாக்கப்படும் சுகாதாரமான, பலரும் உண்ணக்கூடிய பொருட்களை உருவாக்கலாம். வாங்கி வைத்திருந்து உண்ணக் கூடிய பொருட்களாக உருவாக்கலாம். இன்னும் சேதனப்பொருட்களாலான பொதி செய்யும் உறைகளை, பெட்டிகளை, கொள்கலன்களை உருவாக்கலாம்.

விவசாய விளை பொருட்களை மதிப்போற்றம் செய்து புதியவகை பொருட்களை உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

விவசாயிகளுக்கு பயன்படும் எளிய முறை இயந்திரங்களை உற்பத்தி செய்யலாம். இலகுவாக இயங்கக் கூடிய இயந்திரங்கள் என்றால் இன்னும் அதற்கு மதிப்பு அதிகம்.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் வினைத்திறனான முறையில் பயன்படுத்தத்தக்க உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். மின் சக்தியை சேமிக்கும் கொள்கலன்களுக்கு இன்னும் எளிய முறை இணைப்பை ஏற்படுத்தத்தக்கதான வடிவங்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம்.

பயன்பாட்டை அதிகரிக்கும் எளிய பொறி முறைகளை உருவாக்கலாம். கைத்தொலைபேசியின் பாவனையுடன் பயன்படுத்தும் விடயங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம்.

சிறப்பாக திட்டமிட்டால் தொழிற்றுறையொன்றை தெரிவு செய்து சிறப்பாக அதனை முகாமைத்துவப் படுத்தி வெற்றியாளராவதற்கு பல வழிகள் உண்டு.

எதனை தெரிவு செய்யலாம் என்பது உங்களது விருப்பத்திலும் சந்தையின் கேள்வியிலும் தங்கியிருக்கின்றது.

முயன்று பாருங்கள். எதற்கு மக்களிடையே மவுசு அல்லது கேள்வி அதிகம் என ஆராயுங்கள். அதிலிருந்து உங்களது திட்டமிடல் ஆரம்பிக்கின்றது எனலாம்.

# பயங்கரவாதத் தாக்குதல் குறித்து ஆராய பக்கச்சார்பற்ற குழு அமைக்க வேண்டும்

## மகிந்த அணி கத்தோலிக்க எம்.பிக்கள் மைத்திரிக்கு கடிதம்



(கொழும்பு)

**இலங்கையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி பல்வேறு இடங்களில் மேற்கொள் ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் இதுவரை ஆக்கபூர்வமான எந்த விசாரணையும் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெறுகின்ற விசாரணைகளில் எந்த நம்பிக்கையும் இல்லை. எனவே பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில ஆராய சுயாதீன ஆணைக் குழுவொன்றை அமைக்கவேண்டும் என எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் 6பேர் கைச்சாத்திட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் வலியுறுத்தினர்.**

அந்தக் கடிதத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ , நிமல் லான்சா, இந்திக்க அநுருத்த , அருந்திக்க பெர்னாண்டோ , சனத் நிஷாந்த பெரேரா. சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் கையொப்பமிட்டனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட அடிப்படைவாத பயங்கரவாத மற்றும் மிலேச்சத்தனமான தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு 3 மாதங்கள் கடந்து ள்ள போதும் இன்னும் தெரிய வரவில்லை. இந்தத் தாக்குதலில் 300 பேர் வரை. உயரிழந்த துடன் 600 பேர் வரையில் காயமடைந்தனர். இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நியாயம் கிடைக்கவில்லை என்று அந்தக் குடும்பங்களால் அரசு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக எந்தவொரு நியாயமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது எனவும்எமது சமூகத்தில் நிலைப்பாடுகள் இருக்கின்றன. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் இது தொடர்பான விசாரணைகள் தொடர்பாக திருப்தியடைய முடியாது எனப் பல தடவைகள் கூறியுள்ளார்.

இதன்படி ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக சுயாதீன பக்கச்சார்பற்ற ஆணைக்குழுவொன்றை. துரிதமாக அமைத்து அது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து அந்தக் குழுவின் அறிக்கையை வெளியிடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என அந்தக் கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1811

### கம்சா

முதுகுக்குப் பின்னால் துரோகம் செய்துவிட்டு முன்னால் நின்று காப்பாற்றுவது போல் நடிக்கும் மோசமான மனிதர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்



### ஆரோகி

அவசியம் இல்லாதவர்களிடம் உண்மைகளைச் சொல்லாதீர்கள், அவசியமானவர்களிடம் பொய்களைச் சொல்லாதீர்கள்... இரண்டுமே உங்களைக் காயப்படுத்தும்



### ராணி

அதிக உரிமை எடுக்காதே... ஒருநாள் வெறுப்பாய் அல்லது வெறுக்கப்படுவாய்



### மானஸ்

அருகில் இருந்து போலியாக உள்ள உறவை விட... யாருமற்ற தனிமையின் வேதனை மேலானது



### யாழன்

அருகில் இருக்கும்வரை சிலரின் அருமையையும் எளிதில் கிடைக்கும் வரை சிலரின் அன்பையும் நாம் உணர்வதேயில்லை



### தேவா

எவ்வளவு சம்பாதிக்கிறாய் என்பதைவிட முக்கியமானது எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறாய் என்பது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச வங்கிகளை அரசு பாதுகாக்க வேண்டும்

## தினேஷ் வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பை வழங்கும் அரச வங்கிகளை அரசு பாதுகாக்க வேண்டும்.

அதற்கு ஏற்ற வகையிலே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது திருத்தங்களை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களிப்போம் என எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் 23 தனியார் வங்கிகள் இயங்குவதுடன் 3 அரச வங்கிகள் இயங்குகின்றன. மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியனவே நாட்டின் பொருளாதாரத்திற்கு தேவையான பலத்தை வழங்கும் வங்கிகளாக உள்ளன.

இவ் வங்கிகளைப் பாதுகாக்க வேண்டும். இலாபத்தை அதிகரிப்பதற்கான பிரதான வங்கியாக மக்கள் வங்கி இருக்கின்றது. அரச மற்றும் தனியார் துறையின் அபிவிருத்திக்காப் பங்களிக்கும் வங்கியாகவே இது இருக்கின்றது.

அத்துடன் அரசாங்கம் தற்போது கொண்டுவந்திருக்கும் சட்டத் திருத்தத்தில் மக்கள் வங்கியின் பாதுகாப்பு சரத்துக்களை இல்லாமலாக்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# மக்கள் வங்கி குறித்த செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை

## ஹர்ஷ டி சில்வா மறுப்பு



(கொழும்பு)

மக்கள் வங்கியை விற்கப் போவதாக தெரிவிக்கப்படுவது தொடர்பிலான கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அத்துடன் பங்களை விற்பனை செய்வதாயினும் மத்திய வங்கியின் நாணய சபையின் அனுமதியைப்பெறவேண்டும் என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஹர்ஷ டிசில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எனவே மக்கள் வங்கியை விற்கப்போவதாக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பிரசாரத்தில் எந்த உண்மையும் இல்லை. அரசாங்கத்துக்கு சொந்தமான இந்த வங்கியை மேலும் சக்தியடையச் செய்யவே இந்த திருத்தச் சட்டத்தை முன்வைத்திருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (ஜ)

# ஜனாதிபதித் தேர்தலில் தில்ருக்ஷி போட்டியிடார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சொலிசிற்றர் ஜெனரல் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க போட்டியிடமாட்டார் எனத் தகவல்கள் வெளியாகின.

முன்னர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவராக இருந்த தில்ருக்ஷி தற்போது, சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிசிற்றர் ஜெனரலாக பணியாற்றி வருகிறார்.

இவர் ஜனாதிபதித் தேர்தலில்



போட்டியிடுவதற்காக, தனது பதவியை விட்டு விலகும் கடிதத்தை கையளித்தார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஐ.தே.க. தலைமைத்துவத்தால் கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து, அவர், தனது பதவி விலகல் கடிதத்தை மீளப் பெற்றுள்ளார் என, சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டமா அதிபரிடம் கொடுக்கப்பட்ட பதவி விலகல் கடிதம், பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னரே மீளப் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கஞ்சிபான இம்ரானுக்கு ஆறு வருட கடூழிய சிறை



(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான கஞ்சிபான இம்ரான் எனப்படும் மொஹமட் நஜீம் மொஹமட் இம்ரானுக்கு 6 வருட கடூழியச் சிறை தண்டனை வழங்கப்பட்டது.

கஞ்சா போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டு தொடர்பிலே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

2013 ஆம்ஆண்டு செப்டம்பர்மாதம்13 ஆம்திகதி மாளிகாவத்தை பகுதியில் 5.3 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டமை தொடர்பான குற்றச்சாட்டு கஞ்சிபான இம்ரான் மீது சுமத்தப்பட்டிருந்தது. நேற்றைய விசாரணையின் போது அவர் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# செய்தித்துளிகள்

## பேருந்து-வான் மோதி விபத்து 22 பேர் வைத்தியசாலையில்

(சிகிரியா)

சிகிரியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்புள்ள ஹபரண வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் திகம்பதஹா பிரதேசத்தில் திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து எதிர் திசையிலிருந்து வந்த வானுடன் மோதியதில் பேருந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வான் மற்றும் பேருந்து சாரதி உட்பட பயணிகள் 22 பேர் காயத்திற்குள்ளாகி தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை சிகிரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வட்டி விகிதங்கள் குறைப்பு மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

வட்டி விகிதங்களைக் குறைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்தது. இந்நிலையில் மத்திய வங்கியில் நிலையான வைப்பு வசதி விகிதம் மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் ஆகியவற்றை 7 மற்றும் 8 சதவீதங்களால் குறைத்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## துப்பாக்கிப் பிரயோகம் ஒருவர் படுகாயம்

(மித்தெனிய)

மித்தெனிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமூககொவிபல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8.10 மணியளவில் வீடொன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்தவர் 20 வயதுடைய இல-29, சமூக கொவிபல, தோரகொலயாய என்னும் முகவரியினை உடைய தீபால் மதுரங்க என்பவராவார். காயமடைந்தவர் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ஜ)

## சாமிக சுமித் குமார கைது

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இராணுவப் புலனாய் வுத் தலைமைப் பிரிவின் சாமிக சுமித் குமார கைது செய்யப்பட்டார். சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன இத்தகவலை உறுதிப்படுத்தினார். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே அவரைக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 115 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 140 | 120 | 200 |
| தக்காளி | 140 | 120 | 130 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 110 | 120 |
| கோவா | 80 | 70 | 70 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 130 | 120 | 120 |
| பூசணி | 60 | 50 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 80 | 60 | 50 | 100 |
| வாழைக்காய் | 160 | 120 | 100 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 110 | 100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 115 | 140 |
| பாகற்காய் | 160 | 130 | 130 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 90 | 50 | 120 |
| பயற்றங்காய் | 120 | 70 | 40 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 200 | 120 | 130 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 120 | 120 | 220 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 50 | 60 |
| கீரை-1பிடி | 30 | 30 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 140 | 140 | 100 | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 35 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 | 130 | 50 |




# அன்னதானம்



அந்தக் கோவிலில் அன்னதானம் நடந்து கொண்டிருந்தது. அன்னதானம் செய்தவர் தன் குடும்பத்தினருடன் சேர்ந்து எல்லோருக்கும் உணவுப் பொருட்களை வழங்கிக் கொண்டிருந்தார்.

உணவை வாங்கிச் சென்று கொண்டிருந்த ஒருவர், "ஏதோ வேண்டுதலாம்!" என்றார். அன்னதானம் செய்தவரின் வேண்டுதல் பலிக்க வேண்டுமே என்று பரிதாபப்பட்டு இவர் உணவை வாங்கிக்கொண்டு போவது போன்ற தொனி அவர் குரலில் ஒலித்தது.

இன்னொரு நாள் அந்தக் கோவிலில் அதேபோன்று வேறொரு அன்னதானம் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அன்னதானம் செய்தவரை அங்கே காணோம். கோவில் அர்ச்சகரே சர்க்கரைப் பொங்கலையும் புளியோதரையையும் பிரசாதமாக வழங்கிக் கொண்டிருந்தார்.

பிரசாதத்தை வாங்கிச் சென்ற ஒருவர் "யாருடைய உபயம் இது?" என்று கேட்டதற்கு, அர்ச்சகர் "யாரோ ஒரு புண்ணியவான் என்னிடம் பணம் கொடுத்து புளியோதரையும் சர்க்கரைப் பொங்கலும் செய்து சுவாமிக்கு நிவேதனம் செய்து விட்டு, பிரசாதத்தை எல்லோருக்கும் கொடுக்கச் சொல்லி விட்டுப் போனார். நிறையச் செய்து எல்லோருக்கும் நிறையக் கொடுங்கள் என்றும் சொன்னார். அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதா? என்பதே எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் "பூஜைக்கு என்னை எதிர்பார்க்காதீர்கள்" என்று சொல்லி விட்டுப் போனார். அதன்படியே அவர் இன்று வரவில்லை என்றார்.

இந்த இரு அன்னதானங்களைப் பற்றி ஆன்மீகச் சொற்பொழிவாளர் ஒருவரிடம் கேட்டேன். அவர் சொன்னார், தானே நேரில் அன்னதானம் செய்தவர் ஏதோ ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்திருக்கிறார். நல்லது. செய்தால் நல்லது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் செய்யப்பட்டது அது. இது போன்ற நல்வினைகள் நமக்குக் குறுகிய பலனையே அளிக்கும்.

நீங்கள் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்தால், அந்தப் பணம் உங்களுக்கு வட்டியுடன் திரும்பக்கிடைக்கலாம். ஒரு வேளை கடன் திரும்பி வராமல் போனால், "கொடுத்த கடன் திரும்ப வரவில்லையே" என்று கவலைப்படுவீர்கள், வருந்துவீர்கள்.

பலனை எதிர்பார்த்து நல்வினைகளைச் செய்பவர்களும் தாங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டால், "இத்தனை நல்ல காரியங்கள் செய்தேனே! அவற்றுக்குப் பலன் இல்லையா?" என்று புலம்புவார்கள். அன்னதானம் வாங்கிச் சென்றவர் கூட அன்னதானம் செய்தவரைச் சற்றே இளக்காரமாக நினைத்து "ஏதோ வேண்டுதலாம்" என்று பரிதாபப்பட்டோ, எகத்தாளம் செய்தோ பேசினார் பாருங்கள்!

இரண்டாவது அன்னதானம் பலனை எதிர்பாராதது. ஒரு நாள் சிலருக்காவது ஒரு வேளை உணவு வழங்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் விளைந்தது. இதற்காக அவர் பலன் எதையும் எதிர்பார்க்கவில்லை. தான் யார் என்பதையும் காட்டிக் கொள்ளவில்லை. கோவில் பூஜையில் கலந்து கொண்டு புண்ணியத்தை அடைய வேண்டும் என்றோ, அன்னதானம் பெற்றுச்செல்பவர்கள் தம் முகத்தைப் பார்த்துத் தம்மை வாழ்த்த வேண்டும் என்றோ அவர் எதிர்பார்க்கவில்லை. அர்ச்சகர் அவரைப் "புண்ணியவான்" என்கிறார்!

புண்ணியத்தை எதிர்பார்க்காதவருக்குப் புண்ணியவான் என்ற பெயர் கிடைக்கிறது! புண்ணியத்தை எதிர்பார்த்துச் செயற்பட்டவருக்குப் பச்சாதாபம்தான் கிடைத்தது!

தீவினைகள் செய்தால் பதிலுக்கு நாமும் தீமைகளை அனுபவிக்க வேண்டும், நரகத்துக்குப் போக வேண்டும் அல்லது மீண்டும் பிறவி எடுத்து -வந்து கஷ்டப்பட வேண்டும்.

அதுபோல் புண்ணியங்களை எதிர்பார்த்து நற்காரியங்களைச் செய்தால் அதனால் புண்ணியம் கிடைக்கும். அந்தப் புண்ணியம் ஒரு விதத்தில் டிராவலர்ச் செக் போல. வேறொரு சந்தர்ப்பத்தில் அவை நமக்கு நன்மைகளாக மாறும். டிராவலர்ச் செக்கை மாற்றுவது போல் நம் விருப்பப்படி விருப்பமான நேரத்தில், விருப்பமான விதத்தில் மாற்றிக் கொள்ள முடியாதுதான். ஆயினும் புண்ணியங்களுக்குப் பலன்கள் நிச்சயமாகக் கிடைக்கும்.

அந்த நற்பலன்கள் இந்தப் பிறவியிலேயே கிடைக்கலாம், அடுத்த பிறவியில் கிடைக்கலாம். அல்லது உல்லாசப் பயணம் போல் சில காலம் சொர்க்கத்தில் இன்ப வாழ்வு வாழும் வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால் அதன் பிறகு மீண்டும் பிறவி உண்டு. ஆனால் பலனை எதிர்பாராமல் நன்மைகளைச் செய்பவர்கள் இறைவனுக்கு நெருக்கமாக ஆகிறார்கள்.

"நிஷ்காம்ய கர்மம்" என்று கீதையில் பகவான் சொல்கிறார். அதாவது "பலனை எதிர்பாராத செயல்"

இத்தகைய செயல்களைச் செய்பவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையே சொர்க்கமாகும். இப்பிறவி முடிந்ததும் அவர்களுக்கு மறு பிறவி இருக்காது. இறைவன் திருவடி நிழலிலேயே நிரந்தரமாக இருக்கும் பேறு கிட்டும். ஆனால் இப்பிறவியிலேயே இறைவனின் திருவடிகளைப் பற்றியவர்களால்தான் இது போன்று பற்றற்றுச் செயற்பட முடியும். எனக்கு ஓரளவு புரிந்தது போல் இருந்தது. உங்களுக்கு?

திருவள்ளுவர் சொல்வதும் இதைத்தானோ?

**குறள் 5:**

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு

**பொருள்:**

இறைவனின் உண்மையான புகழை உணர்ந்து அதில் ஈடுபடுபவர்களை அறியாமையால் விளையும் இரு வினைகளும் அணுகுவதில்லை.

## சிந்தனைத்துளிகள்

- **சிற்பம்:-** உளியாக எனது தன்னம்பிக்கை... சிதறும் கல்லாக உங்கள் விமர்சனம்... சிற்பமாக எனது வெற்றி!!!
- **ஆர்வம்:-** எல்லாம் தெரியும் என்ற எண்ணம் உன்னை சோம்பேறி ஆக்கும். எதையும் கற்றுக்கொள்ளும் ஆர்வம் உன்னை சுறுசுறுப்பாக்கும்.
- **மயக்கமும்! கவலையும்!:-** புகழுக்கு மயங்காதே... அடுத்த வெற்றியை அது தடுக்கும்! தோல்விக்கு வருந்தாதே... அடுத்த வாய்ப்புக்கான வாசலை அது மறைத்து விடும்!
- **உனது விருப்பம்:-** சிந்திக்க மறுத்திடு! நீ வீழ்ந்து போக விருப்பப்பட்டால்... சிந்தித்து செயற்படு! உன்னை வீழ்த்த நினைத்தீவர்களை வென்றிட ஆசைகொண்டால்...
- **மடிந்து விடாதே:-** விழுந்தால் எழுந்துவிடு! இல்லையேல் புதைந்துவிடு!! அப்படி புதைந்தால்... நிலத்தை பிளந்து வரும் விருட்சம் போல் தடைகளை உடைத்து பிரகாசித்திடும் ஒளியாய் வா!!! மடிந்து விடாதே.

## பொதுஅறிவு வினா விடைகள்

- ராகங்கள் மொத்தம் எத்தனை?
  16
- "கல்விக் கண் திறந்த வள்ளல்" என்று காமராசரை பாராட்டியது யார்?
  பெரியார்
- ஜப்பானியர் வணங்கும் பறவை?
  கொக்கு
- பால் உற்பத்தியில் உலகிலேயே முதல் இடத்தில் உள்ள நாடு?
  இந்தியா
- பிரான்ஸ் நாட்டின் தலைநகர்?
  பாரிஸ்

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்;இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்

-- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்கள் வளங்களைப் பாதுகாப்பதில் யாழ்.பல்கலைக்கழகம் கவனம் எடுக்க வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் தமிழ் இனத்தின் மிகப்பெரும் சொத்து என்று நினைத்த காலம் உண்டு.

சேர் பொன்.இராமநாதப் பிரபுவின் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியை இழந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஈந்தளித்த பெருமை சைவப் பெருவள்ளல் இராமநாதன் பிரபுவையே சாரும்.

தங்களிடம் இருந்த ஒரு பிரபல்யமான கல்லூரியைத் தானம் செய்து, தங்களுக்கென ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கிய கெட்டித்தனம் தமிழினத்துக்கு உண்டு எனச் சிங்கள மக்களும் புகழ்ந்தனர்.

தவிர, பேராசிரியர் கைலாசபதி போன்றவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முழுமையும் தமிழ் மாணவர்கள் பயன் பெறும் வகையில் திட்டமிட்டனர்.

ஆனால் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் எங்கள் கைநழுவிப் போய்விடுமோ என்று ஏங்குமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதுமுக மாணவர்கள் முதல் வருடத்தில் தமிழ் மொழியில் கற்கைநெறியைத் தொடர வேண்டும் என்ற ஒரு நியதியை குறித்துரைத்திருந்தால், இன்று சிங்கள மாணவர்கள் பெருமளவில் வந்து குவியும் நிலைமை முற்றற இல்லாதிருந்திருக்கும்.

என்ன செய்வது தமிழ் மொழியில் கற்பது தகுதிக்குறைவு என்று நினைக்கின்ற சின்னத்தனங்கள் நம்மிடம் மேலோங்கி விட்ட பின்பு, யார் எதைக்கூறியும் எதுவும் ஆகப் போவதில்லை என்றளவில், நடப்பதைக் கண்டு கொள்வோம் என அமைதி கொள்வதுதான் ஒரே வழி.

இவை ஒருபுறமிருக்க, தமிழர் தாயகத்தின் கல்விக் கலாபீடமாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது மக்கள் சமூகம் சார்ந்த பிரதேசத்தின் வளங்கள் தொடர்பில் கவனமெடுப்பது கட்டாயமானதாகும்.

எங்கள் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், செய்யக்கூடிய உற்பத்தி முதலீட்டு முயற்சிகள் என்பன தொடர்பிலும் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களை வழிப்படுத்துகின்ற நடவடிக்கைகளிலும் அதீத கவனம் செலுத்துவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தவிர்க்க முடியாத பணியாகவுள்ளது.

உதாரணத்துக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள மறவன்புலவு, தனங்களப்பு ஆகிய இடங்கள் அதிசக்திவாய்ந்த காந்தப்புலக்கோடுகள் ஊடறுத்துச் செல்கின்ற பகுதிகள் என்றும் இந்த உண்மையை அறிந்த தென்பகுதி தனியார் நிறுவனங்கள் அந்தப் பிரதேசத்தில் உள்ள காணிகளைக் கொள்வனவு செய்கின்றன என்பது பற்றியும் தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

எனவே இது குறித்த ஆய்வுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துறைசார்ந்த பிரிவினர் மேற்கொண்டு; உண்மைத்தன்மையை அறிந்து, எங்கள் வளங்களைப் பாதுகாப்பதுடன் எங்கள் வளங்கள் எங்களை விட்டுக் கைநழுவிச் செல்லாமல் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்க கல்வி அமைச்சு எடுத்த அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்கும் நோக்கில் கல்வியமைச்சு அதிரடி அறிவிப்பொன்றை வெளியிட்டது.

இதன்படி அனைத்துப் பாடசாலைகளிலும் வாரத்தில் ஒருநாளை, ஆங்கில மொழி நாளாகப் பெயரிடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்ட நாளில் ஆசிரியரகள் மாணவர்களுடன்ஆங்கில மொழியிலேயே பேச வேண்டும் என அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்புட்டதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். ரத்நாயக்க தெரிவித்தார்.

"பாடசாலைகளில் ஆங்கிலமொழி கற்றுக் கொடுக்கப்படுகின்ற போதிலும், பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலமொழி பேசுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனாலேயே, வாரத்தில் ஒருநாளை ஆங்கில மொழியில் கலந்துரையாடுவதற்காக ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்மூலம் அன்றாட நாளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள், மாணவர்களுக்குப் பரீட்சயமாவதுடன் அதனூடாக ஆங்கில மொழியில் சரளமாகப் பேசுவதற்கும் அவர்களால் இயலும்.

இது குறித்து பாடசாலை அதிபர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது" என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.(ஐ)

## விபத்தில் கர்ப்பிணி படுகாயம்

(பளை)

பளை - புதுக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில மோட்டார் சைக்கிளைச் செலுத்திய கர்ப்பிணி பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த 31 வயதான ஜெ.சுபாஜினிஎன்றகர்ப்பவதியே மேற்படி விபத்துக்குள்ளாகிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில சேர்க்கப்பட்டுள்ளார்.(9-30)

## சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் சிறப்புச் சொற்பொழிவு இன்று சனிக்கிழமை ஆலய பிரதான மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும்.

இதில் "திருவாசகம் என்னும் தேன்" என்னும் தலைப்பில் சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன் சந்திரவேல் சொற்பொழிவாற்றுவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை "உதித்தனன் உலகம் உய்ய" என்னும் தலைப்பில் சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். (இ-2-5)

## மின்னல் தாக்கியதில் வீட்டின் முன்பகுதி சேதம்

(குருநகர்)

குருநகர் மத்திய, மேற்கு வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த புதன்கிழமை மின்னல் தாக்கியதில் வீட்டின் முன்பகுதியும் மின்னிணைப்பும் சேதமாக்கப்பட்டன. (5-106)

## திருவள்ளுவரைப் பற்றி பல்கலைக்கழகம் அதிகளவில் ஆராய வேண்டும்

### ஆளுநர் சுரேன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவரைப் பற்றி பல்கலைக்கழகத்தினூடாக அதிகளவில் ஆராயவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைவாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் நெறிப்படுத்தலின் கீழ் வட மாகாணத்தில் முதன்முறை இடம்பெறும் திருக்குறள் பெரு விழா "தொட்டணைத் தூறும் மணற்கேணி" என்னும் தலைப்பில் முல்லைத்தீவு ஊற்றுங்கரை சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

முல்லை மாவட்டம் தண்ணீரை கடந்து குருதியிலே நடந்து தீயை கண்டு தீண்டாமையை கண்டு இன்னும் வாழ முடியும் என்று சொல்லும் மாபெரும் மாவட்டம் ஆகும்.

இராணுவங்கள் கடந்து சென்றும் எங்கள் வாழ்க்கையை யாரும் பறித்துக்கொள்ளமுடியாது என்று உலகிற்கு சொல்கின்ற மக்கள் இங்கு இருக்கின்றனர். அதனால் தான் ஜனாதிபதியை மூன்று முறை இந்த மண்ணிற்கு கொண்டு வந்துள்ளேன். முல்லையில் இருக்கும் வேதனையை வெளிப் படையாக சொல்ல முடியா விட்டாலும் மிகவும் அறிந் தவர் ஜனாதிபதி. அதற்கான நடவடிக்கைகளைதான் மேற்கொண்டு இருக்கின் றோம்

திருவள்ளுவரை பற்றி பல்கலைக்கழகம் அதிகளவில் ஆராயவேண்டும் அதுவே என் வேண்டுகோள். இதுவரை நான் அறிந்தவரை யாழ் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவரையோ திருக்குறளையோ பற்றி கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் யாரும் இல்லை.இது ஒரு மாபெரும் குறை. இந்த விழா முடியும் போது திருக்குறளுக்கான பாடநெறியை பல்கலைக்கழக ரீதியில் முன்வைய்யுங்கள் இதுவே என் வேண்டுகோள்.

இந்த யோசனையை நான் ஆதரிக்க விரும்புகின்றேன். அதற்கான நிதியைக் கூட நான் தர முன் வருகின்றேன் மேலும் நவம்பர் மாத இறுதியிலே நாங்கள் சர்வதேச தமிழத் தினம் கொண்டாட வேண்டும் என்ற விருப்பம் உண்டு என மேலும் தெரிவித்தார். (ம-9)

## பலாலி விமான சேவை அலையன்ஸ் எயர் நிறுவனம் ஆர்வம்

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தில் இருந்து தென்னிந்தியாவுக்கு விமான சேவைகளை நடத்துவதற்கு, இந்தியாவின் அலையன்ஸ் எயர் நிறுவனம், விருப்பம் வெளியிட்டுள்ளது.

"இந்திய விமான நிறுவனங்கள் பல, பலாலி விமான நிலையத்துக்கான சேவைகளை. ஆரம்பிக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. அதில் அலையன்ஸ் எயர் நிறுவனமும் ஒன்று" என, இலங்கை சிவில் விமானசேவை அதிகார சபையின், விமான போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்கமைப்பு பணிப்பாளர் ரேஹான் வன்னியப்பா தெரிவித்தார்.


எயர் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான, அலையன்ஸ் எயர் நிறுவனம், இந்தியாவில் 54 நகரங்களை இணைக்கும் வகையில், உள்நாட்டு விமான சேவைகளை நடத்தி வருகிறது. (ம)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவன் படுகாயம்

சாவகச்சேரி -கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் காணப்பட்ட மின்கம்பத்துடன் மோதியதில் பாலாவி வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 22 வயது வி.சிவபூபாலன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (5-30)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மகத்தான செயல்களைச் செய்யவே கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். அவற்றை செய்து முடிக்க உறுதியெடு.
- இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதே.
- நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உன் மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்து விடு.
- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.
- சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம் ஒருவனைக் காப்பதோடு விடுதலை பெறவும் செய்யும்

# தடை நீங்கியது; அணிக்குத் திரும்புவேன்
# சூதாட்டப் புகாரில் சிக்கிய ஸ்ரீசாந்த்



இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்தின் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, முன்னாள் வீரர் வீரேந்தர் சேவாக் அவருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த ஸ்ரீசாந்த இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளராக வலம் வந்தார். ஆனால், ஐ.பி.எல்.தொடரில் அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டதை தொடர்ந்து கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் குற்றமற்றவர் என்று தன்னை அவர் நிரூபித்தாலும், பி.சி.சி.ஐ. அவருக்கு வாழ்நாள் தடை விதித்தது. இந்நிலையில் ஸ்ரீசாந்துக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் தடை 7 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது.


இதன்மூலம் அவர் மீண்டும் களத்தில் இறங்க உள்ளார். ஒகஸ்ட் மாதத்துடன் அவர் மீதான தடை முடிவடைகிறது. இதுகுறித்து ஸ்ரீசாந்த் கூறுகையில், 'இப்போது எனக்கு 36 வயதாகிறது. அடுத்த ஆண்டு 37 வயதாகிவிடும். டெஸ்ட் போட்டியில் 87 விக்கெட்டுகள் எடுத்துள்ளேன்.

100 எடுக்க வேண்டும் என்பதே என் இலக்கு. டெஸ்ட் போட்டிக்கு மீண்டும் திரும்புவேன் என நம்பிக்கை உள்ளது. விராட் தலைமையில் விளையாட எப்போதும் எனக்கு ஆர்வம் உண்டு' என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீசாந்துக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் குறைக்கப்பட்டது குறித்து, இந்திய அணியின் முன்னாள் அதிரடி வீரர் வீரேந்தர் சேவாக் கூறுகையில்,

'ஸ்ரீசாந்த் மீண்டும் இந்திய அணிக்கு திரும்பியது மிக்க மகிழ்ச்சி. முதலில் அவர் உள்ளூர் போட்டிகளில் விளையாட வேண்டியது அவசியம்' என தெரிவித்துள்ளார். (க)

# ரோகித் -அஸ்வின் இருவரையும் இருத்தி வைப்பது
# மிகக் கடினமான செயல் - ரகானே



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் 11 வீரர்கள் பட்டியலில் அஸ்வினுக்கு வாய்ப்பு அளிக்கப்படாதது குறித்து இந்திய டெஸ்ட் அணியின் துணைத் தலைவர் ரகானே விளக்கமளித்துள்ளார்.


ஆன்டிகுவாவில் நடந்த முதல் நாள் ஆட்டத்திற்குப் பிறகு இந்திய டெஸ்ட் அணியின் துணைத் தலைவர் ரகானே அளித்த பேட்டியில், அணியின் ஒட்டுமொத்த சமநிலை காரணமாகவே அணித் தலைவர் விராட் ஹோலி மற்றும் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் அஸ்வினுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்று பரிந்துரைத்துள்ளார்.


அஸ்வின் போன்ற ஒரு வீரரை இழப்பது கடினம், ஆனால் அணி நிர்வாகம் எப்போதும் சிறந்த ஜோடியை குறித்தே கருத்தில் கொண்டிருக்கும்.

ஜடேஜா ஒரு நல்ல தெரிவாக இருக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஏனெனில் அணிக்கு ஆறாவது விக்கெட்டுக்கு துடுப்பாட்டக்காரர் தேவை. அவர் பந்தும் வீசுவார். ஹனுமா விஹாரியும் பந்து வீச முடியும். எனவே அணித்தலைவருக்கும் பயிற்சியாளருக்கும் இடையிலான கருத்து இதுதான்.

அஸ்வின் மற்றும், ரோகித் போன்ற வீரர்களை உட்கார வைப்பது கடினம். ஆனால் அவை அனைத்தும் அணிக்காகவே என்று ரகானே கூறினார். மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி ஒரு நாள் மற்றும் இருபது-20 தொடரை கைப்பற்றிய நிலையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆர்ச்சர் அசத்தல் பந்து வீச்சு
# சுருண்டது அவுஸ்திரேலிய அணி





இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சில் 179 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நேற்று முன்தினம் தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி பந்து வீச்சை தெரிவு செய்தது.

அதன்படி அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர், மார்கஸ் ஹாரிஸ் இருவரும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். ஆர்ச்சரின் வேகத்தில் ஹாரிஸும்(8), பிராட்டின் பந்துவீச்சில் கவாஜாவும்(8) ஆட்டமிழந்து வெளியேறினர்.

அதன்பின்னர் களமிறங்கிய லபுஸ்சாக்னே வோர்னருடன் கைகோர்த்து சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார். இந்நிலையில், டேவிட் வோர்னர் டெஸ்டில் தனது 30 ஆவது அரைச்சதத்தை எட்டினார். அணியின் ஸ்கோர் 136 ஆக உயர்ந்த போது, ஆர்ச்சரின் பந்துவீச்சில் பேர்ஸ்டோவிடம் கட்ச் கொடுத்து வோர்னர் (61) ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆர்ச்சரின் தாக்குதலான பந்துவீச்சில் அவுட் ஆகினர். அணித்தலைவர் பெய்ன் 11 ஓட்டங்கள் எடுத்தார். 9 ஆவது விக்கெட்டாக அவுட் ஆன லபுஸ்சாக்னே மட்டும் 74 ஓட்டங்கள் சேர்த்தார்.

அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 52.1 ஓவருக்கு 179 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து தரப்பில் மிரட்டலாக பந்துவீசிய ஜோப்ரா ஆர்ச்சர் 6 விக்கெட்டுகளையும் பிராட் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க)

## அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டம், மாபெரும் சைக்கிள் ஓட்டம், உள்ளூர் மற்றும் வடமாகாண ரீதியில் நாளை காலை 6 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக முன்றலில் ஆரம்பமாகவுள்ளது. பெறுமதி மிக்க பணப் பரிசில்கள் வழங்கப்படும். போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் காலை 6 மணிக்கு முன்னதாக தங்கள் வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு தலைவர் நி.கவிந்தன் 077 309 5745 பிற்பகல் 1.30 இற்கு விளையாட்டுப் போட்டிகள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய புதிய மைதானத்தில் நிலையத் தலைவர் தவநாதன் ஹரிஷான்ந் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக எச்.என்.பி.முகாமையாளர் மகாலிங்கம் காண்டீபன், அவரது பாரியார் திருமதி. மந்தாகினி காண்டீபனும் கலந்த சிறப்பிக்கவுள்ளனர். (க)

## ஆண்டு நிறைவு விழாவும் மெய்வல்லுநர் நிகழ்வும்

(உடுவில்)

உடுவில் தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மெய்வல்லுநர் நிகழ்வுகளும் 2019 நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தமிழ் ஒளி சனசமூக நிலையத் தலைவர் சிவகுருநாதன் டினேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சுன்னாகம் பிரதேச சபை உறுப்பினர் தவராஜா துவாரகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(ஜ-2)

# தன்னை விமர்சித்தவர்களுக்கு
# அரைச்சதத்தால் பதிலளித்த ரகானே



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், இந்திய அணியின் துணைத் தலைவர் ரகானே அரைச்சதம் விளாசி தன்னை விமர்சித்தவர்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

ஆன்டிகுவாவில் இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி தொடங்கியது. தொடக்க வீரர் கே.எல்.ராகுல் மட்டும் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மயங்க் அகர்வால், புஜாரா, ஹோலி ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்திய அணி தத்தளித்தது. ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்த நிலையில், துணைத் தலைவர் நங்கூரமாய் நின்று ஆடினார். எதிரணிக்கு கடும் சவாலாக இருந்த ரகானே அரைச்சதம் அடித்தார். அவருக்கு பக்கபலமாக ஆடிய ஹனுமா விஹாரி 32 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரகானே 10 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்கள் எடுத்தார். அவரது அரைச்சதத்தால் இந்திய அணி 200 ஓட்டங்களை எட்டியது. ஐ.பி.எல். தொடரில் ஓரளவு சிறப்பாக விளையாடிய ரகானேவுக்கு, உலகக் கிண்ண தொடரில் விளையாட வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

அதனால் இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் பங்கேற்று ஆடினார். எனினும் அவர் சிறப்பான பார்மில் இல்லை. இதனால், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் அவரை தெரிவு செய்வதில் சந்தேகம் இருந்தது. இந்நிலையில் தான் ரோஹித்துக்கு பதிலாக களம் கண்ட ரகானே, தன்னை விமர்சித்தவர்களுக்கு தனது துடுப்பாட்டத்தின் மூலம் பதிலடி கொடுத்துள்ளார். (க)

## இராணுவ புல...

அரச வழக் கறிஞர் நிஷாரா ஜெயரத்ன தெரிவித்தார். (ம-3)

## வீதி விபத்தில்...

அதே திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர் கள் அறுத்துக்கொண்டு ஏ32 வீதி ஊடாக தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த இளைஞர்கள் சிலர் திருடர்களின் மோட்டார் சைக்கிளை பின் தொடர்ந்து சென்றுள்ளனர். திருடர்கள் தப்பித்துச் செல்லும் நோக்கில் கடலுக்கு செல் லும் பாதை என்பதனை அறியாது குறுக்கு ஒழுங்கை ஒன்றினுள் நுழைந்து தனங் கிளப்பு களப்பு பகுதியை அடைந்துள்ளனர்

இதற்கிடையில் இளைஞர்கள் சுற்றி வளைக்க வேறு வழியின்றி பறித்த நகையை இளைஞர்களை நோக்கி வீசி விட்டு மீண்டும் வந்த வழியே மோட்டார் சைக்கிளில் தப்பித்து ஓடியுள்ளனர்.

இதன்போது வீதியில் காணப்பட்ட வேகத் தடை ஒன்றின் மேலாக மோட்டார் சைக்கிள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவரும் காயமடைந்துள்ளனர்.

இருப்பினும் அதில் ஒருவர் மீண்டும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்று சங்குப்பிட்டிக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நிலையில் வீதியில் கிடந்தவரை மீட்ட இளைஞர்கள் அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்ததுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த 25 வயதான இள்ளஞனே திருட்டு முயற்சி யில் ஈடுபட்டு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ் போதனா வைத்தியசாலை க்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு பொலிஸ் காவலுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

திருட்டுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் திருட்டு பொருள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வருகிறது. தப்பித் துச் சென்றவரை கைது செய்யும் முயற்சியில் சாவகச்சேரி பொலிஸார் ஈடுபட்டு வருகின்ற னர்.

பாதிக்கப்பட்ட பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர். (ம-30)

## தமிழ் மக்கள்...

காலத்தில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டால் மாத்திரமே இனப் பிரச்சி னைக்கு தீர்வைப்பெற முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழில் எழுக தமிழ் எழுச்சி நிகழ்வுக்காக ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் சி.வி.விக் னேஸ்வரன் ஈடுபட்டுள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் கூறுகையில், "ஜனாதிபதித் தேர் தல் நெருங்கும் நிலையில் நாட்டின் தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் அனை வரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகப் பலரும் பிரயத்தனத்துடன் செயற்படுவதனை காணக்கூடியதாக உள் ளது.

ஆகையால் நாம் அனைவரும் ஒன்றி ணைந்து ஒருமித்த கருத்தை வெளியிட்டால் தான் எங்களுடைய பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும்.

தமிழ் மக்கள் பேரவையின் கொள்கை யினை ஏற்கும் எந்த கட்சியும் எங்களுடன் இணைந்து பயணிக்கலாம். கொள்கைகள் என்பது வருங்கால தமிழ் மக்கள் பற்றிய தொன்றாகும்.

ஆகையால் அதனை எவ்வாறு அமை க்க வேண்டும். அரசியல் ரீதியாக எவ்வா றான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது எமது மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளை விரை வாக தீர்ப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து எழுக தமிழ் பேரணியில் பேசவுள்ளோம்.

இதேவேளை கொள்கை ரீதியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்முடன் சேர்ந் தவர்கள். சில தனிப்பட்ட காரணங்களுக் காக தற்போது விடுபட்டு நிற்கின்றனர். எதிர்வரும் காலத்தில் அவர்களும் எம்முடன் வந்து இணைவார்கள் என நம்புகின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஆரம்பமாகியது...

இதையடுத்து யாழ். பஸ் நிலையத்தில் மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டன. இந்த பிரசாரங்களில் தமிழ் மக் கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக் னேஸ்வரன், ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச போர்குற்ற விசாரணையை நடத்து, தமிழ் அரசியல் கைதிகள் அனை வரையும் விடுதலை செய், வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடி யாக விசாரணை செய், வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து, இடம் பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் குடியமர்த்து போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி எதிர்வரும் 16.09.2019 அன்று நடைபெறவுள்ள எழுக தமிழ் நிகழ்வுக்கு மக்களை அணிதிரட்டும் முகமாக நேற்று காலை யாழ் நல்லூர் ஆலயம் முன்பாகவும், யாழ் பஸ் நிலையத் திலும் மக்களுக்கு துண்டுபிரசுரங்கள் விநி யோகிக்கப்பட்டன. (ம)

## தமிழ் மக்களின்...

செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ் வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சி னைகளுக்கு தீர்வு பெற்று கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர், பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ள பொதுமக்களின் காணிகள், அத்துமீறிய குடியேற்றங்கள் போன்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## அலுவலக அதி...

தீவுக்கு விஜயம் செய்து 1990ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது காணாமல்போனவர்கள் தொடர்பான விபரங்களைக் கேட்டறிந்தனர்.

அத்துடன் கொல்லப்பட்டவர்களின் சட லங்கள் மண்டைதீவில் உள்ள கிணறுகளில் போடப்பட்டு அக்கிணறுகள் மூடப்பட்டுள்ள விடயம் தொடர்பிலும் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் அலுவலக அதிகாரிகள் குழு கவ னம் செலுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்கள் பேரவை...

பிரச்சினை குறித்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணும் பொருட்டு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினால் தயாரிக் கப்பட்ட தீர்வுத் திட்டம் முழுமை பெற்றுள்ள தாகவும் அதனை அமுல்படுத்தும்போது தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தை நீதிய ரசர் சி.வி.விக்னேஸ்வரன் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் கையளித்ததுடன் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக அமைய முடியுமெனவும் எடுத்து ரைத்தார்.

இச்சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணி யின் சார்பில் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரன், கட்சியின் பொருளாளர் பேராசிரியர் ப.சிவநாதன், கொள்கை பரப்புச் செயலாளர் க.அருந்தவபாலன், ஊடகம் மற்றும் செயற் றிட்ட ஆக்கச் செயலாளர் த.சிற்பரன் ஆகி யோரும் கலந்து கொண்டனர். (ம)

## பிராந்திய அலு...

இன்று சனிக்கிழமை திறக்கப்படவுள்ளது. ஆடியபாதம் வீதியில் இவ் அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய அமைச்சர் மனோ கணேசன் ஆகியோரின் கலந்து கொள்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பிராந்திய அலுவலங்கள் ஏற்கெனவே மாத்தறை, மன்னாரில் திறக்கப்பட்டுள்ளவை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்கள்...

பேச்சுவார்த்தை மீண்டும் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுமந்திரன், சித்தார்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ம)

## பிக்குகளால்...

ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் சுமார் 15 நிமிடங்கள் நடைபெற்றது.

தொல்பொருள் திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம் என்பவற்றால் மக் கள் பாதிக்கப்படுவது, காணிகள் விடுவிக்கப் படாதது, பௌத்த பிக்குகளால் கன்னியா, நீரா வியடி உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப் படும் அத்துமீறல்கள் குறித்து கூட்டமைப்பு தரப்பு விரிவாக குறிப்பிட்டது.

இதை கேட்டுக் கொண்டிருந்த மைத்திரி, "பௌத்த பிக்குகளால் தமிழர்களிற்கு மட்டு மல்ல, எனக்கும் பெரிய தலையிடியாகத்தான் இருக்கிறது. இங்கு பிரச்சினைகளை தந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார். (ம)

## முப்படையின...

பால சிறிசேன நடை முறைப்படுத்தியுள்ளார்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம் நேற்று முன்தினம் (ஓகஸ்ட் 22) வியாழக்கிழமையுடன் காலா வதியான நிலையில் இந்தப் பிரகடனத்தை ஜனாதிபதி நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 40ஆவது அத்தியாயத்தின் 12ஆம் பிரிவின் நாட்டிலுள்ள 25 மாவட்டங் களிலும் பொது அமைதியைப் பேணுவதற் காக முப்படையினருக்கு இதன்மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பொலிஸாருக்கு உள்ள சோதனையிடுதல், கைது செய்தல் உள்ளிட்ட அதிகாரங்கள் முப்படையினருக் கும் வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## காற்றின் வேகம்...

திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப் பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள் ளது.

இதன் காரணமாக கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாக இருக்கும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் புத்தளம் முதல் மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திரு கோணமலை வரையான கடற்பிரதேசங் களில் காற்றின் வேகமானது மணித்தி யாலத்திற்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஜனாதிபதி தேர்தலுக்கு கரு ஜயசூரிய தயாராகிறார் கனக ஹேரத் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கும் நோக்கில் தான் வகித்து வரும் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கரு ஜயசூரிய தயாராகி வருவ தாக பாராளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட் சிக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

"சஜித்தோ, கருவோ என்பது எமக்குப் பொருட்டல்ல. சஜித்தின் விருந்தொன்று இன்று பகல் மாத்தறையில் இருந்தது. இரவு ரணில் விக்ரமசிங்கவின் விருந்தொன்று அலரிமாளிகையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

கொவிசெத
திகதி 2019.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 2218
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 25 36 68
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 3989
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 3 2 7 4 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-08-23
சீட்டிழுப்பு இலக்கம் 191
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 33 47 58 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 0423
வெற்றி எழுத்து T
சுப்பர் இலக்க 02
வெற்றி இலக்கங்கள் 51 53 78 80

கோடீபதி
சீட்டிழுப்பு வாரம்: 485
வர்ணம்: பச்சை
திகதி: 23 ஆகஸ்ட் 2019
வெள்ளி
G 04 13 33 38
9 7 4 9 8
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.137,123,738/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 273
சீட்டிழுப்பு திகதி 23.08.2019
சிவப்பு
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 16 27 45
விதி எண் 5
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 23.08.2019
வெற்றி வாரம் 2595
வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் 27 30 58 59
சிம்மம்
டபுள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 3140
ரூ.100 பரிசுக்காக 775
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 709
சீட்டிழுப்பு திகதி: 2019.08.23
விசேட இலக்கம் 8446
வெற்றி இலக்கங்கள் 07 08 61 72
ஆங்கில எழுத்து O

## அபிவிருத்தியை வெற்றி பெற

# இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படும் - ஐ.நா

(கொழும்பு)

ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கை பிரதிநிதி றோபேட் யூகரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக தற்போது நாட்டில் நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து இதன்போது ஐ.நா பிரதிநிதி ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார். இலங்கையின் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு ஏற்ப பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு இலங்கைக்கு உதவுவதாக அவர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தார். (ம)


**V2 TRAVELS**




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

**VISA EXTENSION**
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

**0768227499**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-7320)



**விரைவு பொதிகள் சேவை**

**. விசேட விலை குறைப்பு**



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

**0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS

(C-7319)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



**021 222 8093** 61,தச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(9989)



**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூபாய் 100), சில்லறையாகவும் (ரூபாய் 110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
தொடர்புகளுக்கு :021 222 2567

(C-7338)



**TVS**

தமிழர்களின் மனம் கவர்ந்த Scooter தொடர் (TVS) மிகக்குறைந்த ஆரம்ப கட்டணத்துடன்




**செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்!**

உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**JP Motors**
**Chankanai & Manipay**

077 715 1101, 077 129 0712
077 758 5909, 021 225 2226

(C-7356)





இணுவில் திருப்பதி

**ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலய**

**கிருஷ்ண ஜெயந்திப் பெருவிழாவும்**

**உறியடி உற்சவமும் - 24.08.2019 சனிக்கிழமை**

*கிரியா நிகழ்வு*

அதிகாலை 6.00 மணி முதல் மூலவருக்கு கலச அபிஷேகம்.
காலை 7.30 மணிக்கு மகா தீபாராதனை, உபசாரம், தொடர்ந்து தர்சனம்.
காலை 10.00 மணி முதல் அகண்டநாம பஜனை.
நண்பகல் 12.00 மணிக்கு ததீயாராதனம்.
மாலை 4.30 மணிக்கு உற்சவம் ஆரம்பம்.
மாலை 5.00 மணிக்கு நவநீதகிருஸ்ண பகவானுக்கு அலங்கார தீபாராதனை. உபசாரம், திருப்பாசுர சமர்ப்பணம்.
மாலை 5.30 மணிக்கு பகவான் உறியடி உற்சவ புறப்பாடு திருவீதியுலா. தொடர்ந்து உறியடி உற்சவம் இடம்பெறும்.
மாலை 6.30 மணி முதல் கலை நிகழ்ச்சிகள்.

மாலை 6.30 மணி முதல் நாட்டிய சமர்ப்பணம்
வழங்குபவர் : திருமதி சத்தியப்பிரியா கஜேந்திரன் நெறியாள்கையில் பொன் சக்தி கலாகேந்திரா மாணவர் வழங்கும்
"நாட்டியாஞ்சலி"

தொடர்ந்து 8.00 மணிக்கு விசேட தொட்டில் தாலாட்டுப் பூஜை. பெரியாழ்வார் அருளிச்செய்த தாலாட்டுப் பாடல் சமர்ப்பணம் செய்யப்படும்.
இரவு 9.00 மணிமுதல் ஆலய நித்திய பஜனைக் குழுவினரின் பஜனை இடம்பெறும்.
நள்ளிரவு 12.00 மணிக்கு விசேட அபிஷேகம், விசேட நைவேத்தியம் (காயம்)

**25.08.2019 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரியும் தொடர்ந்து ததீயாராதனம் (பாறணை அன்னதானம்) -**

மகா அபிஷேகம் நடைபெறுவதால் அடியார்கள் அபிஷேகத்திற்குத் தேவையான பால், இளநீர், தயிர், பூ மற்றும் அபிஷேகப் பொருட்களை முற்கூட்டியே ஆலயத்தில் சமர்ப்பிக்கவும்.

உபயகாரர். ஆலய தர்மகர்த்தா - ச.கணேசலிங்கம் 0777252476


**1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**
**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**



எமது குடும்பத்தின் தலைவர்
அமரர்
**கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன்**
(மயிலிட்டி கற்கண்டு)

தோற்றம் : 15.04.1948 மறைவு : 05.09.2018

ஆண்டொன்று ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்று எம் நனவு மனம் ஏங்குகிறது
அப்பா உம் இழப்பு நம்மையெல்லாம் உருக்குலைய வைத்ததப்பா
அன்பு கொண்ட உம் வதனம் என்றும் எம்மோடு இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்! எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது அப்பா உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...

கடந்த 05.09.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன் (மயிலிட்டி கற்கண்டு) அவர்களின் 1ஆம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) எதிர்வரும் **25.08.2019 ஞாயிற்றுக்கிழமை** அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். எனவே அந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி,
வல்வெட்டித்துறை.

(C-7355)

- குடும்பத்தினர் -

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.